Koviloor Digital Library

கண் கண்ட கடவுள்

(ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்)

11559
Q22

எழுவன்கோட்டை மு. சண்முகம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-2

1109.

கண் கண்ட கடவுள்

(ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்)

எழுவன்கோட்டை மு. சண்முகம்

A. No. 11559
Q22
நூலகம், கோவிலூர்

குமரன் பதிப்பகம்
19, கண்ணதாசன் சாலை,
(பாலாஜி கல்யாண மண்டபம் அருகில்)
தியாகராயநகர், சென்னை-17.
☎ 24353742, 24312559

குமரன் பதிப்பகம்

Koviloor Digital Library

நூல் விவரம்

நூலின் பெயர்	: கண் கண்ட கடவுள் (ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்)
ஆசிரியர்	: எழுவன்கோட்டை மு. சண்முகம்
நூல் வகை	: வரலாற்றுக் கவிதை
முதற்பதிப்பு	: அக்டோபர், 2007
பக்கங்கள்	: 160
தாள்	: 21.6 மேப்லித்தோ
அச்செழுத்து	: 11 புள்ளிகள்

விலை ரூ. 60.00

கணினி அச்சு	: சிவா கிராஃபிக்ஸ், சென்னை-94. 9884712091
அச்சிட்டோர்	: சபரி பிரஸ்ஸ், சென்னை-14.

Koviloor Digital Library 4-2

பரித்ராணாய சாதூநாம்
விநாசாய சதுஷ்கிருதாம்
தர்ம ஸம்ஸ்தாப நார்த்தாய
சம்பவாமி யுகே! யுகே!!

சாதுக்களைக் காப்பதற்கும், துஷ்டர்களை அழிப்பதற்கும், தர்மத்தை நிலை நிறுத்துவதற்கும் நான் ஒவ்வொரு யுகத்திலும் அவதாரம் செய்கிறேன்.

- பகவான் ஸ்ரீ கண்ணன்

குருக்ஷேத்ரப் போர்க்களத்தில் இருந்த ரண நதிக்கு பீஷ்மரும் துரோணரும் இரு கரைகளாகவும், ஜயத்ரதன் நீராகவும், காந்தார மன்னன் நீலோத்பலம் என்னும் கொடியாகவும், சல்லியன் சுறாமீனாகவும், கிருபன் என்பவன் பிரவாகமாகவும், கர்ணன் பேரலைகளாகவும் அஸ்வத்தாமனும், விகர்ணனும் பயங்கரமான மகரமீன்களாகவும், துரியோதனன் நீர்ச் சுழலாகவும் இருந்தனர்.

இந்தப் பயங்கரமான ஆற்றைப் பாண்டவர்கள், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரைப் படகாகக் கொண்டு கடந்து சென்றனர்.

Koviloor Digital Library

கடவுள் வாழ்த்து

இருமருங்கும் ஆறுசூழ் ஏழரநற்கோட்டை
திருவழகு தானுவந்து சேர்ந்த பெருமானார்-பெருமானார்
இவ்உலகைக் காப்பதுடன் யாப்புகளும், ஈகின்ற
எந்தை விசுவே துணை.

Koviloor Digital Library 4-2

பாஞ்சாலி துதி

ஆதியில் பாஞ்சால கன்னியுமாகவே
அக்னியில்ப் பிறந்த தாயே
அரசு துரியோதனனை
வெல்வதற் காகவே
ஐவர்க்கும் பாரியானாய்
சூதாடி நாடிழந்து
ஈராரு வருஷமாய்
செல்கானகம் திரிந்து
சொந்தமது விராடபுரம்
வந்துமது கிருஷ்ணனைத்
தூதாகவே அனுப்பி
வாது செய்திடும் துரியோத னாதிகள்
வதைத்து நிர்தூளியாக்கி
மண்டலம் மகிழ்ந்திட
மயங்கொண்ட துரோபதா,
மாதங்கி, திரிசூலியே
மேவினில் புகழ்ந்திட
வாசல்ப்ர தானியே - எங்கள்
அழியாதான் மொழி வாழும்
அன்னையே! துரோபதை அம்மையுமையே!

இந்த ''கண்கண்ட கடவுள்'' என்ற நூல் ஸ்ரீ கண்ண பிரான் தங்கையும் பாஞ்சால இராஜகுமாரியும், ஐவர்க்கும் பார்யையும், எங்கள் குலதெய்வமுமாகிய அருள்மிகு துரோபதா தேவியின் பாதார விந்தங்களுக்கு சமர்ப்பணம்.

Koviloor Digital Library

வாழ்த்துரை

வாசுதேவ சுதம் தேவம் கம்ஸசணூர மர்த்தனம்!
தேவகி பரமானந்தம் கிருஷ்ணம் வந்தே ஜகத்குரும்

பரப்பிரம்மம் தன் மாயைக் கொண்டு இவ்வுலகில் பல அவதாரங்கள் எடுத்திருந்த போதிலும், ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் அவையாவிலும் சிறந்ததாகக் கருதப்படுகிறது!

ஸ்ரீ கிருஷ்ணர் பாலனாக இருந்தபோது நிகழ்த்திய லீலைகள் யாவரையும் கவர்கின்றன. அவர் சிறுவனாக இருந்தபோது செய்த சாதகசங்கள் அனைவரையும் பிரமிக்க வைக்கின்றன!

கம்ஸ வதத்திற்குப் பின்பு பரமபத- ஆரோஹணம் வரை அவர் புரிந்த செயல்கள் அவர் தர்மத்தை நிலைநாட்டுவதற்காக அவதாரம் செய்தவரே என்பதை உணர்த்துகின்றன! அவர் அன்பும், தயையும் மிக்கவர் என்பதும், அவரிடம், உள் அன்புடன் பக்தி செய்தவர்களைக் காப்பாற்றி வந்தார் என்பதும் அவர் சரித்திர நிகழ்ச்சிகளிலிருந்து நன்கு விளங்கும்!

ஸ்ரீ கிருஷ்ணருடைய குணாதிசயங்களைப் பற்றித் தமிழிலும், வடமொழியிலும், ஹிந்தி, கன்னடம், தெலுங்கு மற்றும் இதர மொழிகளிலும் கவிதை வடிவிலும், பக்தி ஸ்தோத்திரங்கள் வடிவிலும் பல படைப்புக்கள் உள்ளன. இவற்றில் நானறிந்தவரை ஸ்ரீ கிருஷ்ணரின் சரிதை முழுமையாகக் கூறப்படவில்லை.

தற்பொழுது திரு.சண்முகம் அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திரத்தை முழுமையாகக் கவிதையாக வடித்திருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

Koviloor Digital Library

ஸ்ரீமத் பாகவதம், மஹா பாரதம் ஆகியவற்றில் ஸ்ரீ கிருஷ்ணர் குறித்துக் கண்டுள்ள பாகங்களை நன்கு ஆராய்ந்து, அவற்றை ஒன்றிணைத்து தனக்கே உரிய எளிய, நளின நடையில் கவிதை படைத்திருக்கிறார்!

ஸ்ரீ கிருஷ்ணர் பரமபதாரோஹணத்துக்கு முன், சரஸ்வதி நதிக்கரையில் அமர்ந்து இவ்வுலகில் தான் சாதித்த காரியங்களை தன் மனக் கண்ணால் காண்பது போலக் கவிதையைத் துவக்கியிருப்பது புதிய யுக்தி; நம்மைக் கவர்கிறது!

ஸ்ரீ கிருஷ்ணரின் பால்ய லீலைகள் மற்றும் குசேலருக்கு அனுக்ரகம் செய்தது, தூது சென்றது, எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் பகவத் கீதையை குருக்ஷேத்திரத்தில் உபதேசம் செய்தது முதலான பகுதிகளும் அன்னாரின் கவிதைத் திறனை நன்கு வெளிப்படுத்துகின்றன. ஸ்ரீ கிருஷ்ணரின் இறைத்தன்மையையும் நன்கு வெளிக் கொணரப்பட்டுள்ளது.

திரு. சண்முகம் அவர்களின் கவிதைத் திறன் அவர் 'தெய்வத் திருமகன்' என்ற தலைப்பில் எழுதிய ஸ்ரீமத் இராமாயணம் நூலில் பிரகாசமாகத் தெரியவந்துள்ளது.

தற்பொழுது அவர் படைத்திருக்கும் 'கண் கண்ட கடவுள்' என்ற ஸ்ரீ கிருஷ்ணாவதாரச் சரித்திர நூல் மேலும் அவர் புலமையை, புலப்படுத்துகிறது.

அவர் மேலும் சிறப்பான கவிதை நூல்கள் எழுதி மேன்மையுர ஸ்ரீகிருஷ்ணர் ஆசி அருள் புரிய வேண்டுகிறேன்.

இந்த நூலை ஊன்றிப் படிப்பவர்களுக்கு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் ஆசி கிட்டும் என்பதில் ஐயமில்லை!

S. ராமச்சந்திர ஐயர்
மூத்த வழக்கறிஞர் M.A., B.L.,
தேவகோட்டை

Koviloor Digital Library

நூலுக்குள் நுழையுமுன்

ஓங்கி உலகளந்த உத்தமன், உலகத்தோரை உய்விக்க வேண்டி "யது" வம்சத்தில் வந்துதித்தார். தர்மம் நலிவடை யும் பொழுது அதை உயர்த்தவும் நல்லோர் துன்பத்தைத் துடைக்கவும், யுகம்தோறும் அவதரிக்கும் பரம் பொருளே, கண்ணனாகத் தோன்றி துஷ்டர்களைத் தண்டித்து, சிஷ்டர் களை ரக்ஷித்தான் அவன் நல்கிய உபதேசத்தால் "ஜகத்குரு" என்று போற்றப்பட்டான்.

அவன் சரிதையை அவன் அருளால் எழுதும் பாக்யம் என் எண்ணத்தில் உதித்தது.

கடவுள் மனிதனாகத் தோன்றியது ஸ்ரீ இராமாவதாரம். கடவுள் கடவுளாகவே தோன்றியது ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்.

நான் தசரதச் சக்ரவர்த்தியின் குமாரன்; அதுமட்டுமே எனக்குத் தெரியுமென்றவன் ஸ்ரீ இராமன்! எல்லாமே எனக் குத் தெரியுமெனத் தெளிவுபடக் கூறியவர் ஸ்ரீ கண்ணன்!

யுத்தமே செய்யமாட்டேன் எனக் காண்டீபத்தைக் கீழே போட்டுக் கண்ணனின் கால்களைப் பற்றிக் கெஞ்சின பார்த்தனுக்கு, குருக்ஷேத்ர பூமியிலே தன் விஸ்வரூபத்தைக் காட்டி யுத்தம் செய்தாக வேண்டுமென உபதேசம் செய் கிறார் பகவான் கண்ணன். அவர் நினைத்திருந்தால் எங்கு வேண்டுமானாலும் சொல்லியிருக்கலாம். ஆனால் அவர் சொல்ல வேண்டியவருக்குச், சொல்ல வேண்டியதைச், சொல்ல வேண்டிய இடத்தில், சொல்ல வேண்டிய விதமாகச் சொல்கிறார் அதுதான் "கீதை".

Koviloor Digital Library

சொல்ல வேண்டிய பார்த்தனுக்குச் சொல்ல வேண்டிய தாகிய யுத்தம் செய்ய வேண்டுமென்பதைச் சொல்ல வேண்டிய இடமாகிய குருக்ஷேத்ர பூமியிலே சொல்ல வேண்டிய விதமாக “கீதை” மூலம் அறிவுரை சொல்கிறார். யுத்தம் செய்ய மறுத்த பார்த்தன் மனம் தெளிந்து காண்டீபம் கையிலெடுத்துக் களத்திலே வெற்றியுமடைகிறார்.

இடம் பொருள் அனைத்தையும் தேர்ந்தெடுத்து தாம் சொல்ல வேண்டியதைச் சொன்னால், எத்துனை கடின நெஞ்சையும் மாற்றி நாம் நினைத்ததைச் சாதிக்கலாம். இதுதான் கீதை மூலம் பகவான் நமக்குப் போதிக்கும் போதனையாகும்.

அந்த மகா புருஷனின் சரிதையை சின்னக் கண்ணன் முதல் பாரதம் நடத்திய பகவான் கண்ணன் வரை, துவாபர யுக மக்கள் கண்ணில்க் கண்ட கண்ணனை, என்னால் முடிந்த அளவிற்குத் தொகுத்து “கண்கண்ட கடவுள்” என்ற தலைப்பில் எழுதியுள்ளேன். “தெய்வத்திருமகன்” என்ற இராமாயணம் எழுதிய எனக்கு பகவான் கண்ணனையும் எழுதுமாறு எங்கிருந்தோ கட்டளை வந்ததாகவே உணர் கிறேன்.

பரந்தாமன் கலியுகத்தில் மீண்டும் அவதரிப்பேன் எனக் கூறியுள்ளார். அந்த மகாபுருஷனை, அழகனை, ஆடை அணி கலன் அலங்காரனைக் காண, பக்தர்களாகிய நம் உள்ளங்கள் தவித்த வண்ணம் உள்ளது.

பகவான் சொன்ன சொல் மாறாதவர். பாரத யுத்தத்தில் ஐவரைக் காப்பபேன் என்றான்; காத்தார்! அது போலப் பூவுலகில் மீண்டும் அவதரிப்பார். அந்த நினைப்பிலே நாம் இன்புறுவோம்!

இந்த நூல் வெளியாவதற்கு, உறுதுணையாக இருந்து ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய பிரம்ஹஸ்ரீ ஐயா, S. இராமச்சந்திர ஐயர், மூத்த வழக்கறிஞர் தேவகோட்டை,

Koviloor Digital Library

அவர்களுக்கு என் வணக்கத்தையும் நன்றியையும் கூறிக் கொள்கிறேன்.

தேவைப்படும் பொழுதெல்லாம் என்னுடனிருந்து நூல் வெளியிட அரும் உதவிகள் செய்த கவிஞர் திரு. N. சபாரத்தினம் அவர்கள், இலக்கிய மேகம் N. சீனிவாசன் அவர்கள், தேவகோட்டை, இந்நூலைப் பதிப்பித்துக் கொடுத்த குமரன் பதிப்பகம் திரு. S. வைரவன் ஐயா அவர்களுக்கும் நன்றி உரித்தாகுக.

எழுவன்கோட்டை மு. சண்முகம்

Koviloor Digital Library

உள்ளடக்கம்

1. ஸ்ரீ கண்ணன் எண்ணம்
2. ஸ்ரீ பூமாதா கவலை
3. ஸ்ரீ கண்ணனின் பெற்றோர்கள்
4. ஸ்ரீ கண்ணன் பிறப்பு
5. கண்ணன் கோகுலம் செல்லல்
6. கம்சன் கோபம்
7. கெட்டவனுக்கு கெட்ட நண்பர்கள்
8. பூதகி அழித்தல்
9. சகடாசுரன் வதம்
10. புயல்க் காற்றாய் வந்த த்ருணாவர்த்தன்
11. சின்னக் கண்ணன் வெண்ணெய் தின்னல்
12. பழத்திற்கு ரத்தினம்
13. பிருந்தாவனம் சேர்த்தல்
14. காளிங்க நர்த்தனம்
15. பிரம்மனை வென்றபரந்தாமன்
16. கோபியர் விளையாட்டு
17. கண்ணன் பசிதீர்த்த முனிப்பத்தினிகள்
18. கோவர்த்தனகிரியை குடைப்பிடித்தல்
19. அக்ரூரருக்குக் காட்சியளித்தல்
20. கம்சனின் கடைசி நாட்கள்
21. குரு தக்ஷணை
22. கிருஷ்ணன் ஞாபகம்
23. துவாரகை நிர்மாணம்
24. ருக்மணி கல்யாணம்
25. சத்யபாமா கல்யாணம்

Koviloor Digital Library

26. நரகாசுரன்
27. பாஞ்சாலி சுயம்வரம்
28. இந்திர பிரஸ்தம்
29. சுபத்ரை கல்யாணம்
30. ஜராசந்தன் யுத்தம்
31. சிசுபாலன் வதம்
32. கண்ணனின் குசேலர்
33. திரௌபதிக்கு துகில் கொடுத்தல்
34. பரந்தாமன் பசி
35. ஸ்ரீ கண்ணன் தூது
36. ஸ்ரீ கண்ணன் சபதம்
37. கர்ணன் கவச குண்டலம் கவர்தல்
38. கர்ணனுக்கு பிரம்மாஸ்திரம் மறக்கச் செய்தல்
39. கர்ணன் பிறப்பறிதல்
40. ஸ்ரீ கிருஷ்ணன் துணை தேடல்
41. குருக்ஷேத்திரம்
42. கண்ணன் கோபம்
43. அர்ஜுனன் தேற்றல்
44. ஜெயத்ரதன் வதம்
45. துரோணாச்சார்ய முடிவு
46. கர்ணனுக்கு கண்ணன் காட்சியளித்தல்
47. கடைசி யுத்தம் (கிருஷ்ணன் - துரியோதனன் சம்பாஷனை)
48. பாண்டவர் வம்சம் காத்தல்
49. பீமன் காத்தல்
50. உதங்கருக்கு கண்ணன் காட்சி
51. திருக்கண்ணன் விண்ணுலகம் செல்லல்

Koviloor Digital Library

கண்கண்ட கடவுள்

(ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்)

1. ஸ்ரீ கண்ணன் எண்ணம்

சரஸ்வதியோ சாகரத்தில்
சங்கமிக்கும் கரையோரம்
எம்பெருமான் அங்கு சென்று
எழ நினைத்தார் விண்ணுலகம்!
பாரதம் முடித்து விட்டுப்
பலஆண்டு ஆட்சி செய்ய
கோகுலத்தார் நியதி களோ
குறைந்துமே போன தினால்
பரந்தாமன் மனம் வருந்திப்
பள்ளி கொண்டார் தனிமையிலே
பாற்கடலாய் எண்ணி அந்தப்
பசும்புல்த் தரை மீதே!

தன்னுடைய அவதாரம்
தரணியிலே முடிந்திடவே
வந்த இடமோ செல்ல
வழி பார்த்து நின்ற வண்ணம்
கண்ணனாய்த் தான் பிறந்து
கடந்து வந்த பாதையினை
மறுபடி யும்ஒரு முறைதன்
மனக்கண் ணால்கண் டிட்டார்!

Koviloor Digital Library

2. ஸ்ரீ பூமாதா கவலை

பூபாரம் மிகுந்த தினால்
பூமாதா கவலை கொண்டு
சுமக்கவோ முடியா வண்ணம்
சேர்ந்திட் டாள்மன முடைந்து!

நான்முக னிடமே சென்று
நடப்பவை எல்லாம் சொல்லி
முக்கண் ணன்துணை யுடனே
முறையிட்டார் பரந்தா மனிடம்!

நல்லவர் கெட்டவர்கள்
நாட்டினைக் கெடுப்ப வர்கள்
எல்லோ ரையும் தாங்க
இயலாது என்று சொன்னாள்!

பாற்கடலில்த் துயிலு கின்ற
பரந்தாமன் கேட்டு விட்டு
பார்ப்போம் யாம்உட னென்று
பிரமனுக்குச் செய்தி சொன்னார்!

Koviloor Digital Library

தேவர்கள் அனைவ ரையும்
திரளாக ஆயர் வீட்டில்ப்
பிறக்கவே செய்துவழி
பூமாதா அனுப்பு என்றார்!

தேவகி வயிற்றி லந்தத்
திருக்கண் ணன்அவ தரிக்கக்
காலத்தை எண்ணி யுமே
காத்திருந்தார் எம்பெருமான்!

கோசலை வயிறு தன்னைக்
கோதண்டன் தேர்ந்த துபோல்
தேவகி வயிறு தன்னைத்
திருக்கண் ணன்தேர்ந் தெடுத்தார்!

Koviloor Digital Library

3. கண்ணனின் பெற்றோர்கள்

தேவகி வசுதே வரவர்
திருமணமோ நடந்த பின்னே
தேர், குடை, யானை என்று
சிறப்பாகச் சீர்கள் கொண்டு
அன்னவள் தமைய னான
கம்சனோ தேரை ஓட்டிப்
புக்ககம் அனுப்ப வேண்டிப்
புறப்பட்டுச் சென்ற போது,
விண்ணிலே ஓர் ஒலியோ
விளித்தது கம்சன் நோக்கி
"உன்னையே ஒழிக்க வல்ல
ஓர் குழந்தை தாய்க்கா போயும்
தேரினை ஓட்டு கின்றாய்
தெளிவற்ற கம்சா நீயும்"

அன்னவள் வயிற்றினிலே
அவதரிக்கும் ஆண் மகனோ
எட்டாவதாய்ப் பிறந்து உன்னை
எப்படியும் கொல்லு மென்றே!"

Koviloor Digital Library

அசரீரிச் சொற்கள் கேட்டு
ஆத்திரம் அடைந்த மன்னன்
கத்தியை உறுவிக் கொண்டு
கர்ஜித்த வண்ணம் சென்றான்.

ஜெய விஜய ராகத்
திருமாலின் காவல் காத்தோர்
முன்னொரு நாள் சாபம் பெற்று
மூன்று பிறப் பெடுத்தும்
மாலவனை எதிர்க்க வேண்டி
மண்ணிலே பிறந்த மன்னன்!

அன்நாளில் இரண்யந் கசிபு
அடுத்துமே இலங்கேசன், கும்பன்
இன்நாளில் கம்சன் மற்றும்
இவன்போல சிசுபாலனானோன்!

இரண்யனோ நரசிம் கனாலும்
இராவணன் ஸ்ரீஇராம னாலும்
இன்நாளில் கண்ண னாலும்
இறக்கவே பிறந்திட் டோர்கள்!

Koviloor Digital Library

வசுதேவர் மனம் கலங்கி
வலியோன் தமைத் துனரை நோக்கி
அத்தானே பொறுத்தருள் வீர்
அபலையைக் காத்து என்றான்!

அசரீரி சொல்லைக் கேட்டு
அநியாயம் செய்ய லாமா!
தங்கையைக் கொலள் உமக்கு
தர்மமோ மன்னா என்றார்!

என்னுடை குழந்தை எல்லாம்
ஈவேன் நான் பிறந்த உடன்
எங்களைப் பொருத்து மேதான்
எதுவுமே செய்யாய் என்றான்!

கம்சனோ மனது மாறி
காக்கின் றேன்இன்று உம்மை
சொன்ன சொல்மாறா வண்ணம்
செய்துமே பிழையு மென்றான்!

பிள்ளையோ பிறந்த போது
பேசின பேச்சுப் போல
கம்சனிடம் கொண்டு மேதான்
காட்டினான் குழந்தை தன்னை!

சொன்னது போல நீயும்
செய்ததால் மகிழ்கின்றேன் யான்
எனக்கிது தேவை இல்லை
எடுத்துமே செல்என் றிட்டான்!

Koviloor Digital Library

அந்நேரம் கம்சன் முன்னே
அவதரித்த கலகப் பிரியன்
கம்சனின் முன்னே சென்று
கலகத்தை ஆரம்பித் தார்!

கம்சனே கலவரம் ஏன்
கண்ணனை நினைத்துக் கொண்டா?
உன்மீது அன்பினாலே
உரைக்கின் றேன்இர கசியத்தை!

திருமாலோ பிறக்க உள்ளார்
தேவகி வயிறு தன்னில்
எட்டாவது குழந்தை யாக
எதற்கும்நீ கவனம் என்றார்!

முன்னமே பிறந்த வர்கள்
முழுவதும் கோகு லத்தில்
கண்ணனின் துணையாய் நிற்கக்
காணாது வளரு கின்றார்!

ஆகவே கம்சா நீயும்
அனைத்தையும் கொன்று விட்டால்
நீயுமே பிழைத்துக் கொள்வாய்
நெடுமாலின் பகையில் என்றார்!

Koviloor Digital Library

4. ஸ்ரீ கண்ணன் பிறப்பு

கம்சனோ கோபம் கொண்டு
கடுமையாய் ஆணை யிட்டான்
தேவகி வசுதே வரையும்
சிறையிலே அடையு மென்று!

வசுதேவ ருடன் தேவகியோ
வாடியே சிறை இருக்க
தேவவர்கள் மகிழ்ச்சி கொண்டார்
திருமாலின் பிறப்பை எண்ணி!

கோள்கள் அனைத்தி னையும்
குறை யிலா இடத்தில் வைத்து
ஆவணி மாதம் அந்த
அமர பக்ஷ அஷ்டமியில்

ரோகிணி நாள் தனிலே
உலகினைக் காக்க வேண்டி
நெடுமாலோ பிறந்து விட்டார்
நீலநிறக் கண்ண னாக!

மஞ்சள் நிறப்பட் டுத்தி
மாணிக்க நகைகள் பூட்டி
ஆயுதங்கள் பலவும் ஏந்தி
அழகாகச் சிரித்த வண்ணம்!

Koviloor Digital Library

வசுதேவர் ஓடி வந்து
வாரி அனைத்த வண்ணம்
திருமால் எனத் தெறிந்து
சிந்தை மகிழ்ந்து நின்றார்!

தேவகி யோமன மகிழ்ந்து
தெய்வமே உம்மை நாங்கள்
காப்பது எந்த விதம்
கம்சன் என் அண்ணன் முன்னால்,

உன்னையே கொல்வ தற்கு
உறங்காது காத்து உள்ளான்
இதற்குமே வழிகள் சொல்வாய்
எனஅழுது கேட்டு நின்றாள்!

Koviloor Digital Library

5. கண்ணன் கோகுலம் செல்லல்

கண்ணனோ சிரித்த வண்ணம்
தன்னுடைய உருவம் காட்டி
அம்மையே அப்பா நீவிர்
அஞ்சற்க காப்பேன் என்றார்!

முன்னிரண்டு பிறவி யிலும்
என்னையே நீங்கள் பெற்றீர்
இப்பிறவி கடைசி யாமே
எம்முடனே வருவீர் என்றார்!

உம்முடை சினேகி தனோ
ஒப்பற்ற நந்த கோபன்
கோகுலத் தில்வாழு கின்றார்
குற்ற மில்லா மனிதராக

என்னையே கொண்டு சென்று
ஈந்திடுவீர் கோகுலத்தே
இப்பொழுதே பிள்ளைபெற்ற
எனதருமை யாசோதை யிடம்

அவளுடைய குழந்தை தனை
அக்கணமே கொண்டு வந்து
சேர்த்துமே விட்டிடுங்கள்
சிறையிலே என்று சொன்னார்!

Koviloor Digital Library

சொல்லி முடித்த துமே
சிறுகுழந்தை யாகி விட்டார்
கருணை நிறைந்த அந்தக்
கண்ண பிரான் உடனடியாய்!

கண்ணனோ சொன்ன தெல்லாம்
கணப்பொழுதில் மறந்து போகக்
கோகுலத் துச்செய்தி மட்டும்
கொஞ்சம் நினைத் திருந்தார்.

கனவு கண்டவர் போலக்
கண்விழித்த வசு தேவர்
குழந்தை தனைக்கொண்டு செல்ல
கூடைதனைக் கைஎடுத்தார்.

கண்ணன் மேலக் கைகள்படக்
கைவிலங்கு கழண் டோட
சிறைக்கதவும் தான் திறக்கச்
சிப்பந்தி தூங்க லானார்!

கூடையில் சுமந்த வண்ணம்
கொண்டு செல்லும் போதினிலே
இருளோ விலகி நிற்க
எங்கெங்கும் பெருவெளிச்சம்

கண்ணனைக் காண்பதற்குக்
கடும் ஆவல் கொண்டதனால்
வருணனோ ஓடிவர,
வழியெங்கும் பெருமழையாம்!

கண்ணன் நனைவதனைக்
கண்டுமே கோப முற்ற
ஆதிசே ஷன் வந்தவர்க்கு
அழகாய்க் குடை பிடித்தான்!

Koviloor Digital Library

வழியில் யமுனை நதி
வந்திடவே அன்னை யவள்
தன்னை இரண்டாகத்
தான்பிளந்து பாதை தந்தாள்!

கண்ணனுக்கு யமுனை என்றால்
கனப் பிரியம் அல்லவன்றோ
பின்நாளில் கதை கதையாய்ப்
பேசியதும் அங்கு அன்றோ!

ஆயர்குல மன்னனவன்
அரண்மனை வீட்டினிலே
தடையேதும் இலா நிலையில்
தான் நுழைந்தார் கண்ணனுடன்!

அப்பொழுதே பிள்ளை பெற்ற
அன்னை யசோதை அங்கு
என்ன பிள்ளை பெற்றோம்
எனக் கூடத் தெரியாது,

மயக்க நிலை தனிலே
மயங்கிக் கிடக்கயிலே
கண்ணனை விட்டு விட்டுக்
கடந்துமே பெண்ணெடுத்துத்
தேவகியிடம் கொண்டு
சேர்த்திட்டார் சிறைக்குள்ளே!

சந்தேகம் இலா திருக்கச்
சங்கிலியோ கை பூட்ட
சிறைக்கதவும் தான் மூடச்
சிவனே, என் றிருந்திட்டார்!

Koviloor Digital Library

கோவிலூர் ஆண்டவர்
Acc.No.1 1559
Q22

6. கம்சன் கோபம்!

குழந்தை குரல் கேட்ட
கொடும்பாவிக் காவலர்கள்
பிள்ளையோ பிறந்ததெனச்
சொல்லிவிட்டார் கம்சனிடம்!

குழந்தை பிறந்த செய்தி
கொடிய வனோகேட்ட வுடன்
கத்தியை எடுத்த வண்ணம்
வெட்டவே ஓடி வந்தான்!

என் உயிரைக் குடிக்க வந்த
எமன் எங்கே என்றவண்ணம்
தங்கை யிடமே சென்று
தரணி யெலாம் நடுங்கநின்றான்!

தேவகியோ மிகப் பயந்து
திருமாலைக் காத்திடவே
ஆண்பிள்ளை அல்ல அண்ணா
அழிவில்லை இவளா லென்றாள்!

ஏதுமே காதில் விழா
இரக்கமிலா அக்கொடியோன்
குழந்தையின் கால்கள் பற்றிக்
கோபமதாய்த் தரை அடித்தான்!

Koviloor Digital Library

அந்நேரம் அக்குழந்தை
அவதரித்துக் காளியாக
சண்டாளா உன்னைக் கொல்ல
சாகரத்தோன் வளருகிறான்!

அன்னவர் கரங்களிலே
அழிவது நீ,திண்ண மடா
என்னுடைய கால் பிடித்தாய்
இலைநானே கொன்றிடுவேன்!

இனியேனும் நல்ல வனாய்
இருக்கநீ நினைத் திட்டாலோ
தேவகி வசுதேவர் தனைச்
சிறையினின்று விடுவி என்றாள்!

காளியின் உருவம் கண்டு
கம்சனோ மனது மாறி
தங்கையைச் சிறை விடுத்துச்
தவறுக்கு மன்னி என்றான்!

Koviloor Digital Library

7. கெட்டவனுக்கு கெட்ட நண்பர்கள்!

அப்பொழுது அங்கு வந்த
அவர் நண்பர் பலபேரும்
அடுத்தடுத்துக் கேலிசெய்தார்
அம்முடிவு எடுத்த தற்கே!

கம்சனே உன்னைக் கொல்லக்
கண்ணனோ பிறந்து விட்டான்
ஒருமாதம் முடிந் தவனும்
ஒளிந்துமே வாழுகின்றான்!

உடனே நீ அழித்துவிடு
உயிர்குடிப்பான் இல்லை எனில்
அதற்கான வழியனைத்தும்
ஆராய்ந்து செய்யுமென்றார்!

Koviloor Digital Library

8. பூதகி அழித்தல்

கம்சனோ மீண்டும் எண்ணிக்
கட்டளை பிறப்பித் திட்டான்
பூதகிதனை அழைத்து
போ என்று சொல்லியுமே!

என்னுடைய எல்கை தன்னில்
இப்பொழுதே நீயும்சென்று
ஒருமாதக் குழந்தை மொத்தம்
உடனேயே கொல்லும் என்றான்!

பூதகி மார்பு தன்னில்ப்
பொல்லாத விஷம் தோய்த்து
நல்லவளாய் வேட மிட்டு
நாட்டிற்குள் நுழைந்து விட்டாள்!

பிள்ளைகட்குப் பாலுடனே,
பெரிய விடம் கொடுத்து
கொன்றுமே குவித்து விட்டாள்
கோகுலத்துப் பிள்ளை களை!

கடைசியாய் வந்தவளோ
கண்ணனுக்குப் பால் கொடுக்க
கண்ணனோ தெரிந்து கொண்டான்
காதகியின் எண்ணம் தன்னை!

Koviloor Digital Library

அரக்கியோ அவன் எடுத்து
அணைத்தவுடன் மார்பு தன்னில்
பாலைக் குடிப்பது போல்
பரந்தாமன் கடித்திழுத்தார்!

பாலை உறிஞ்சு வண்ணம்
பாதகியின் உயிர் உறிஞ்சி
பாவியோ துடி துடிக்கப்
பரலோகம் அனுப்பி வைத்தார்!

பூதகியோ உருவம் மாறிப்
பொல்லாத அரக்கியாக
எல்லோரின் கண்கள் முன்னே
எம்பெருமான் வீழ்த்திவிட்டார்!

Koviloor Digital Library

9. சகடாசுரன் வதம்

பிறந்தநாள் விழாதனிலே
பிள்ளைகளோ மகிழ்ந்திருக்க
பட்டாடை உடுத்தி அங்கு
பலநகைகள் பூண்ட வண்ணம்
தொட்டிலிலே எம்பெருமான்
துயில்கின்ற வேளை யிலே
வண்டி ஒன்று வந்து நிற்க
வந்தவர்கள் வியந்தனரே!

பரந்தாமனைக் கொல்வதற்குப்
பாதகனோ அனுப்பி வைத்த
சகடாசுரன் வண்டி யாகிச்
சக்கரத்தால் இடிக்க வந்தான்!

சக்கரமோ இடிக்க வரச்
சாட்சாத் பரம் பொருளோ
காலாலே உதைத்திடவே
கட்டையாய்ப் கீழே விழுந்தான்.

Koviloor Digital Library

10. புயல்காற்றாய் வந்த த்ருணாவர்த்தன்

சகடாசுரன் மாண்டிடவே
சண்டாளன் கோபம் கொண்டு
த்ருணாவை அனுப்பிவைத்து
தீர்த்துவிடு கண்ணன் என்றான்!

கோகுலத்தில் நுழைந்தவுடன்
கொடும் அசுரன் மாயையினால்
புயல்க் காற்றாய் உருவாகிப்
பூமிதனை மறைத்திட்டான்!

இதுவே சமய மென்று
எம்பெருமான் கொல்லவந்தோன்
கண்ணனைத் தூக்கியுமே
கடுவேகில்ப் பறந்து சென்றான்!

அன்னை யசோதை வந்து
அவள் குழந்தை காணாது
அழுது புலம்பியுமே
ஆகாயம் பார்க்கலானாள்!

ஒரு வயதே ஆன அந்த
உலகளந்த பெருமாளை
வீசியே எறிய அந்த
வீணனோ நினைக்கையிலே

Koviloor Digital Library

கைகளோ விரிந்த வண்ணம்
கடலாக அதுபரவிக்
கழுத்தை நெறித்திடவே
கட்டையாய் மண்ணில் வீழ்ந்தான்!

அரக்கன் வதமான தனை
அங்குள்ளோர் பார்த்துவிட்டு
குழந்தையின் செயல்கள்கண்டு
குழம்பியே நின்றிருந்தார்!

கண்ணனின் திருச் செயல்கள்
கண்டவர் வியந்து நிற்க
கண்ணனோ சிரித்த வண்ணம்
மண் அள்ளித் தின்றிருந்தான்!

யசோதையோ மனமுருகி
ஏன்கண்ணா மண்தின்றாய்
தாயோநான் பால்தருவேன்
வாய்திறந்து குடிஎன்றாள்.

வாய்திறந்த குழந்தையினுள்
வானவர் வியக்குவண்ணம்
பூமியோ சுழலக்கண்டு
பொன்மகள் நிலைகுலைந்தாள்!

யசோதையோ மிகப் பயந்து
யார்இந்தக் குழந்தை என்று
"மகனேநீ யாரோ" என்று
மனமுருகிக் கேட்டு நின்றாள்!

கண்ணனோ வாயை மூடி
கணப் பொழுதில் குழந்தையாகி
அன்னையின் அணைப் பினிலே
அம்ருதமோ அருந்த லானார்.

Koviloor Digital Library

11. சின்னக் கண்ணன் வெண்ணெய் தின்னல்

வெண்ணெய் என்றால்க் கண்ணனுக்கு
வெகுஆவல் இயற்கை யிலே
அன்னை அவள் கடையயிலே
அள்ளி அள்ளித் தின்றிடுவான்!

என்னசொன்ன போதும்
ஏற்காத சின்னக் கண்ணன்
கோகுலத்தார் வீடு மொத்தம்
கொள்ளையோ அடித்திடுவான்!

கோகுலத்துப் பெண்களெல்லாம்
கோபம் மிகுந்த வண்ணம்
அன்னை யசோதை யிடம்
அழைத்ததுமே சொல்லி நிற்பார்!

என்பிள்ளை தவறு செய்யான்
என்றுமே அன்னை அவள்
சொன்னவரை எல்லாம் எதிர்த்துச்
சுட்டிடுவாள் நாவினினால்!

வெண்ணெய் தின்னும் போது
வீட்டிற்கு வந்த வளோ
கையும் களவுமாய்க்
கண்டுமே கொண்டு வந்தாள்!

Koviloor Digital Library

தாயோ மிக வெகுண்டு
தனயனைக் கட்ட எண்ணி
எக்கயிறு எடுத்தாலும்
இடுப்பிற்குப் போதவில்லை!

விரட்டிப் பிடித்து அவள்
வேதனையோ மிக அடைந்து
உரலிலே கட்டியுமே
ஒருபொழுது போட்டிட்டாள்!

அன்னையோ கட்டி விட்டு
அப்புறமாய்ச் செல்கை யிலே
கண்ணனோ உரல் இழுத்துக்
கடைப்பக்கம் சென்றிட்டான்!

கொல்லையிலே நின்றஇரு
குடைபோன்ற மருதமரம்
கண்ணனின் உரல் இடிக்கக்
கணப் பொழுதில் சாய்ந்த தங்கே!

அதிலிருந்த இருபேரும்
அழகாய்ச் சிரித்த வண்ணம்
எம்முடைய சாபமோ
எம்பெருமானால் நீங்கியது
எனமகிழ்ந்து நள கூபரன்
இறைவனை வணங்கி நின்றார்!

Koviloor Digital Library

12. பழத்திற்கு ரெத்தினம்

பழக்காரி பார்த்த வனோ
பறந்தோடி நெல்க் கொணர்ந்து
அரைஉழக்கு நெல் கொடுக்க
அவள்கொடுத் தாள் ஓருழக்கு!

என்ன பாட்டி எனக்கு
இவ்வ ளவுபழம் எனவும்
கூடையே வேண்டிடினும்
கொடுத்திடுவேன் உனக்கென்றாள்!

கண்ணனோ மகிழ்ந்த வண்ணம்
காட்டியுமே ரத்தினத்தை
எடுத்துக்கொள் பாட்டி என்று
இயம்பி விட்டுச் சென்றானே!

இரத்தினம் பார்த்தவளோ
இதுஎன்ன மாயை எனக்
கண்ணனில் காலடிகள்
கண்களில் ஒத்தி நின்றாள்!

Koviloor Digital Library

13. பிருந்தாவனம் சேர்தல்

கோகுலத்தை விட்டு விட்டு
குடிபெயர்ந்தார் பிருந்தாவனமோ
குழந்தைகள் விளையாடக்
குறையில்லை என் றெண்ணி!

தன்அண்ணன் பல ராமன்
தான்துணை யாய்த்தினம் தினமே
மாடுகள் மேய்த் திடவே
மருகோனே சென்று வந்தார்.

கண்ணனின் வளர்ச்சி கண்டு
கம்சனோ மிகப் பயந்து
ஓயாது அரக்கர் களை
ஒழிப்பதற் கேஅனுப்பி வைத்தான்!

கண்ணனோ அவர்கள் கண்டு
கணக்காகக் கதை முடித்து
பற்பல சோதனையும்
பக்குவமாய் வென்று வந்தார்!

Koviloor Digital Library

14. காளிங்க நர்த்தனம்

கோகுலத்துப் பசுக்கள் தனை
கொன்றுமே தின்று வரும்
காளிங்கன் தனைப் பற்றிக்
கவலை கொண்டார் ஆயர்களே!

ஓர்நாள் உலகளந்தோன்
ஓட்டினான் பசுக்கள் தனை
காளிங்கன் மடு நோக்கிக்
கண்டு வரஎண் ணியுமே!

கண்ணன் வருவ தனைக்
கண்டுமே காளிங்கன்
இன்றைக்குப் போதுமென
இருந்திட்டான் மனம் மகிழ்ந்து!

கண்ணனோ நீந்தியுமே
காளிங்கன் வால்பிடிக்க
சீறியே வந்திட்டான்
சிறுவனென எண்ணியுமே!

கட்டிப் பிடித்த வண்ணம்
காளிங்கன் போர் செய்ய
எம் பெருமான் உடல் சுருக்கி
ஏறிட்டார் தலை மீதே!

Koviloor Digital Library

வாலைப் பிடித்த தன்மேல்
வாட்டமாய் ஏறியுமே
தலை மீது நின்றபடி
தாண்டவமோ செய்திட்டார்!

கண்ணனின் திருஉருவம்
காளிங்கன் தாங்காது
கண் விழி பிதுங்கிடவே
காத்தருள்வீர் என்றிட்டான்!

கண்ணனைத் தெரிந்து கொண்டுக்
காளிங்கன் மனம் வருந்தி
பரந்தாமா மன்னித்து
பாவி உயிர் காப்பீர் என்றார்.

காளிங்கன் கதைகள் சொல்லக்
கண்ணனோ மன மிறங்கி
கருடனின் பயமோ வேண்டாம்
கடல் போய் நீர் சேரு மென்றார்!

Koviloor Digital Library

15. பிரம்மனை வென்ற பரந்தாமர்

யமுனை நதிக்கரையில்
யாதவ மக்களுடன்
மாடுகள் மேய்ந்து வந்தார்
மாதவனோ மன மகிழ்ந்து

நண்பகல் உணவருந்த
நண்பருடன் அமர்ந்திருக்க
பசுக்கள் மொத்தம் காணாது
பயந்து விட்டார் குழந்தைகளே!

தயிர் சாதக் கையுடனே
தயாளனோ உடனெழுந்து
பசுக்களைத் தேடிடவே
பக்கத்தே சென்று வந்தார்.

திரும்பி வரும் பொழுது
திரளான ஆயர் பிள்ளை
ஒருவரையும் காணாது
உணர்ந்திட்டார் சூது தன்னை!

நான் முகனின் செயல்களென்று
நன்றாகத் தெரிந்து கொண்டு
எத்தனை ஆயர், பசு
அத்தனையும் தானார்.

Koviloor Digital Library

என்றும் போல் அன்றும்
ஏகினார் பசுக்களுடன்
எள்ளளவும் வேற்றுமையோ
இல்லாது கோகுலமோ!

ஓர் நாள் இருநாள் அல்ல
ஒருவருடம் சென்றிடவே
எப்படியும் வந்திடுவார்
என்றிருந்தார் பிரம்மனுமே!

கண்ணன் வராததனைக்
கண்டதிர்ந்த நான் முகனோ
ஓர் நாள் பிருந்தாவனமோ
உளவறியச் சென்றிட்டார்

கண்டஅக் காட்சிகளோ
கலங்கவைக்க நான்முகனோ
அத்துணை பசுக்களையும்
ஆயரையும் அங்கு கண்டார்.

குகையிலே ஒளித்த பசு
குறைவின்றி அங்கிருக்க
இத்துணை பசு இங்கே
எந்தவிதம் என நினைத்தார்!

Koviloor Digital Library

எல்லாமே கண்ணன் செயல்
எனக் கண்ட நான்முகனோ
தன்னையே மன்னிக்க
தவமாய்த் தவமிருந்தார்!

ஐயனே நீவிர் தான்
அத்துணை பசு கன்றாய்
ஆயராய் உள்ளீர்கள்
அடியேனும் அறிந்திட்டேன்

உம்முடைய பசுகன்றை
உடனே நான் விடுவிப்பேன்
என்னையே மன்னித்து
ஏற்றருள வேண்டு மென்றார்

பசுகன்று வந்தவுடன்
பகவானோ நீக்கி விட்டார்
மாயையில்! வந்த அந்த
ஆயர், பசு அனைத்தயுமே!

Koviloor Digital Library

16. கோபியர் விளையாட்டு

கோகுலத்துப் பெண்கள் எல்லாம்
கோபாலனை எண்ணி எண்ணி
தங்களை இழந்த வண்ணம்
தத்தளித்தார் அவர் நினைவில்!

கோபியர்கள் பல பேரும்
குளிக்கின்ற மடு அருகில்
கண்ணனோ ஒளிந்து கொண்டுக்
களவாடி ஆடை சென்றான்.

குளித்து முடித்து விட்டுக்
கோபியர்கள் பார்க்கை யிலே
ஆடைகள் மொத்தம் அங்கே
அவர்கையில் கண்டிட்டார்!

மரத்தின் மேல் இருந்து கொண்டு
மாதவனோ குழல் ஊத
மயங்கியே நின்றி ருந்தார்
மாதவனைப் பார்த்த வண்ணம்!

கோபால! ஆடை களைக்
கொடு என்று கேட்டிடவே
வந்துமே ஆடை களை
வாங்கியுமே செல்லு மென்றார்

Koviloor Digital Library

ஏன் கண்ணா நாங்கள்
எவ்வாறு வந்திடுவோம்
ஆடையில்லா நிலையினிலே
ஆண் மகன் உன்னிடமென்றார்.

என்னையே நீவிர் எலாம்
ஏற்பது உண்மை யெனில்
கரைக்கு வருவதிலே
கஷ்ட மென்ன எனக் கேட்டார்!

புறப்பொருளைப் பார்த்து விட்டு
புலம்பு கின்ற மாதர்களே
அகப்பொருளைநீர் கண்டால்
அல்லலே இல்லை என்றார்!

கண்ணனையே கடவுளாய்க்
கண்டு வரும் கோபியர் காள்
என்னவோ எனை வேறாய்
எண்ணுகிறீர் எதற் கென்றார்!

கண்ணனோ நகைத்த வண்ணம்
கன்னியர்க்கு ஆடை தந்து
உடைகளை உடுத்தி யுமே
ஓடிவாரும் அருகில் என்றார்!

அன்னவன் லீலை களை
அவர்பாடி மகிழ்ந்திருக்க
கண்ணனோ குழல் ஊதிக்
காந்தம் போல் இழுத் திட்டார்!

சந்தோஷ மிகுதி யிலே
சாய்ந்துமே விழுந்த வண்ணம்
வந்தது எதற் கென்று
மறந்துமே கண் துயின்றார்!

Koviloor Digital Library

17. கண்ணன் பசிதீர்த்த முனி பத்னிகள்

மாடுகள் மேய்த்து வந்த
மாயோன் பசியாலே
சிறுவர்களை அழைத்து மேதான்
செல்லுவீர் என்று சொன்னார்!

கம்சனுக்குப் பயந்து மேதான்
காட்டிலே யாகம் செய்யும்
முனிகளைப் பார்த்து நீவிர்
முடிந்ததைக் கொணர்வீர் என்றார்!

சிறுவர்கள் சென்று அங்கே
சீரிய முனிவர் கண்டு
கண்ணனோ அனுப்பி வைத்தார்
கடும் பசி என்று சொல்லி
ஏதேனும் கொடுத்து மேதான்
எம்பசி காப்பீர் என்றார்!

முனிவர்கள் வேள்வி தன்னில்
முழுவதுமாய் மூழ்கியதால்
சிறுவர்கள் கூற்றை யாரும்
சிந்தனையோ கொள்ள வில்லை!

பாலர்கள் மன முடைந்து
பசியினால்க் காத டைத்து
கண்ணனிடம் திரும்பவந்து
கருணை இலை முனிவர்க் கென்றார்

Koviloor Digital Library

கண்ணனோ நகைத்து விட்டு
கவலையே வேண்டாம் தோழர்
பத்தினி களிடம் சென்றே
பரந்தாமன் பேரைச் சொல்வீர்.

என்றது கேட்ட ஆயர்
இறைவனை எண்ணிக் கொண்டே
அன்னையர் களிடம் சென்று
அனுப்பின கதையைச் சொன்னார்.

கண்ணனின் பெயரைக் கேட்ட
கற்பினினில்ச் சிறந்த பெண்கள்
நாராயணன் வந்து தாமே
நல்வாய்ப்பு தந்தார் என்றார்!

வேள்விக்குச் செய்து வைத்த
வெகுவான பலகா ரங்கள்
உடனேயே எடுத்துக் கொண்டு
ஓடினர் கண்ணன் நோக்கி

கண்ணனில் கண்டார் பெண்கள்
கிருஷ்ணனாய், மாத வனாய்
எம்முடை எண்ணம் இன்று
ஈடேறி நடந்த தென்றே!

எங்களுக் கருள வேண்டி
இக்கோலம் பூண்டாய் கிருஷ்ணா
பசியேதான் வந்த தாகப்
பரந்தாமா அருள்செய்தாய் என்றார்.

பலகாரம் பலவும் தந்து
பலராமன் கண்ணன் பார்த்து
எல்லாமே எடுத்துக் கொண்டு
எங்களைக் காப்பீர் என்றார்.

Koviloor Digital Library

கண்ணனோ களித்த வண்ணம்
தன்அண்ணன் ராமன் ஆயர்
எல்லோரும் சேர்ந்து மேதான்
இனியுண்போம் அம்மா என்றார்.

முனிவரின் பத்தி னிகள்
முறை யிட்டார் தன்னை பார்த்து
இனிஎம்மை ஏற்கார் முனிவர்
எல்லாமே நீர்தான் என்றே!

கண்ணனோ சொல்வார் தாயே
கவலையே வேண்டாம் போங்கள்
முன்னவர் ஒன்றும் சொல்லார்
முகமலர்ந்து ஏற்பார் என்றே!

பெண்களின் வருகை கண்டு
பெருமுனிகள் சொல்ல லானார்
தாங்களே பாக்யம் பெற்றோர்
தவ்ற யாம் விட்டோம் என்றே!

கண்ணின் செயல்கள் கேட்டுக்
களித்திட்ட முனிவர்களோ
பெண்களே நாங்கள் சென்றால்
பிடிப்பானே கம்சன் என்றார்!

Koviloor Digital Library

18. கோவர்தனகிரியைக் குடைபிடித்தல்

கோகுலத்தின் வழக்கம் போல்க்
கொண்டாட இந்திரனை
கண்ணனோ பார்த்து விட்டுக்
கதையினை மாற்றி விட்டார்!

இதுஎன்ன வேடிக்கை
இந்திரனுக் கேன்பூஜை
இயற்கைதான் நமக்கெல்லாம்
இதை மாற்றிச் செய்யு மென்றார்!

பசுக்களைப் பூஜை செய்வீர்
பாற்கடலைப் பூஜைசெய்வீர்
மலைகளையும் மரங்களையும்
மனதாரச் செய்யு மென்றார்.

கோபாலன் சொற்கள் மீறாக்
கோகுலப் பெரியோர் சேர்ந்து
இந்திரனை விட்டு விட்டு
இயற்கையை வணங்க லானார்!

இந்திரனோ தெரிந்து கொண்டு
இது என்ன சதியோ என்று
கோபமோ கொண்டு மேதான்
கொட்டினார் பெரு மழையை!

Koviloor Digital Library

ஆயர்கள் நனைந்து நிற்க
அவர் பசுக்கள் நடு நடுங்க
செய்வ தொன் றறியா மக்கள்
சித்தமோ கலங்க லானார்!

கண்ணனோ பார்த்து விட்டுக்
கவலையே வேண்டாம் மக்காள்
எல்லோரும் அருகில் வாரும்
எனச்சொல்லி அவர ழைத்தார்!

தன்உரு பெருக்கிக் கொண்டே
தாங்கியே கோவர்த் தனத்தை
சுண்டுவிரல் கொண்டு மேதான்
தூக்கியே குடை பிடித்தார்!

ஆயர்கள் மொத்தம் வந்து
ஆடுமாடுகள் அனைத்தும் சேர்த்து
மாலவன் குடையின் கீழே
மகிழ்ந்துமே வாழ்ந் திருந்தார்!

தேவேந்திரன் கோபத் தாலே
தினம்ஏழு, மழையோ பெய்ய
சிரமங்கள் ஏதும் இன்றிச்
சிரித்துமே ஆயர் வாழ்ந்தார்!

இந்திரன் கோப மெல்லாம்
ஏதுமே செய்யா வண்ணம்
கண்ணனோ காப்பதாகக்
கண்டிட்டார் தேவேந்திரனோ!

அன்னவரை எதிர்த்து ஒன்றும்
ஆகாது என்று எண்ணி
கண்ணனின் முன்னே வந்து
காத்தருள் செய்வீர் என்றான்.

Koviloor Digital Library

கண்ணனோ இந்திரனைப் பார்த்துக்
கனிவாகச் சொல்ல லானார்
தன்பலம் தனை உலகில்த்
தவறாகக் காட்டாதீர் என்றே!

இந்திரனோ பகவான் நோக்கி
எல்லோர்க்கும் பெரியோர் நீரே
தேவாதிப் பட்டம் ஏற்று
தேவர்கள் காப்பீர் என்றான்.

கண்ணனின் கருணை பெற்றுக்
காமதேனு கொணர்ந்துமே தான்
புண்ணிய பால் கலந்து
புனித நீருடன் அபிஷேகம் செய்தான்.

தேவர்கள் மலர் பொழியத்
திரளாய்க் கின்னரர் சூழ
"கோவிந்த" பட்டாபி ஷேகம்
கொண்டாடி மகிழ்ந்திட்டாரே!

தேவர்கள் கண்ணன் நோக்கித்
திருநாமம் பலவும் சூட்டி
கோவிந்தா கிருஷ்ணா என்றும்
கோபாலா நாராயணா
மாதவா என்றும் சொல்லி
மகிழ்ந்துமே சென்றிட்டாரே!

Koviloor Digital Library

19. அக்ரூரருக்கு காட்சியளித்தல்

நாரத முனியோ வந்து
நலம்தனைக் கேட்கும் வண்ணம்
கம்சனின் எதிரி யான
கண்ண னைச்சொல்லி நின்றார்!

கோகுலம் வாழ்ந்து வரும்
குழந்தையே கண்ணன் ஆவர்
உன்னையே ஒழிப்ப தற்கே
உருவாகி யுள்ளார் என்றார்.

கம்சனோ தெரிந்து கொண்டு
கடும் கோபம் கொண்ட வண்ணம்
பலராம னும்கண் ணனுமா
பழிதீர்க்கப் பிறந்தோர் என்றான்?

தன்னுடைய அமைச்ச ரான
சான்றோர் அக்ரூரர் பார்த்து
கோகுலம் சென்று மேதான்
கூட்டியே வருவீர் என்றான்.

தனுர் யாகம் செய்ய வேண்டி
தனயர்கள் கண்ணன் இராமன்
கூட்டியே வந்து விட்டால்க்
கொல்லவும் வசதி யென்றார்!

Koviloor Digital Library

அக்ரூரர் வருத்தம் கொண்டார்
அற்பனின் ஆசை கண்டு
எப்படிக் குழந்தை களை
இங்கே நாம் கொணர்வோம் என்றே!

கம்சனின் திட்டம் யாவும்
கணக்காக அக்ரூரர் சொல்ல
இராமனும் கண்ண னுமே
நல்லது நல்ல தென்றார்!

கண்ணனோ இராம னுடன்
கம்சனைப் பார்க்க வேண்டி
மதுரா புரிஏகி னார்கள்
மனதிலே மகிழ்ச்சி பொங்க!

மாலைப் பொழுதினிலே
மாயவனைத் தேரில் வைத்து
அக்ரூரர் மட்டும் சென்றார்
யமுனையில் குளிப்ப தற்கே!

கண்ணனை நினைத்துக் கொண்டு
தண்ணீரில் மூழ்கும் போது
பலராமன் கண்ண னையே
பார்த்திட்டார் தண்ணீர் உள்ளே!

Koviloor Digital Library

என்னடா மாயை என்று
எழுந்துமே மேலே பார்த்தால்க்
கண்ணனும் இராம னுமே
கரைமீதே அமர்ந்து உள்ளார்கள்.

மறுபடியும் நீரில் மூழ்க
மாதவனோ பாற்கடலில்ச்
சேஷன்மேல்ப் பள்ளி கொண்ட
சீரிய கோலம் கண்டார்!

மனதிலே மகிழ்ச்சி பொங்க
மந்திரியோ வந்து சேர
என்னவோ அமைச்சரே நீர்
இவ்விதம் மகிழ்கின்றீர் என்றார்.

கண்ணனே சொன்னால்த் தானா
கடவுள் நீர் தெரிந்து கொள்வீர்!
எல்லாமே உந்தன் அருள்தான்
என்பாக்யம் பாக்ய மென்றார்!

Koviloor Digital Library

20. கம்சனின் கடைசி நாட்கள்

கம்சனின் ஆணை போலக்
கண்ணனை அழைத்துக் கொண்டு
மாலையோ மயங்கும் நேரம்
மதுரையோ சேர்ந்தார் அமைச்சர்

எல்லாமே தெரிந்து கொண்டு
எம்பெருமான் மதுரை வந்தார்
தன்னுடைய மாமன் கம்சன்
தலைவிதி முடிந்த தென்றே!

செல்கின்ற வழியி லெல்லாம்
சிறப்பான வாவேற் புக்கள்
கண்ணனே கண்டு மேதான்
கழித்திட்டார் அண்ண னுடன்.

கண்ணனைக் கண்ட மக்கள்
களித்து மேமன மகிழ்ந்து
வஸ்த்திரமும் மாலை களும்
வழங்கினார் சாலை தோறும்!

எல்லாச் சிறப்பும் பெற்று
யாக சாலை முன்னே செல்ல
வழியிலே எதிர்த்து மேதான்
வந்தார் பலர், கண்ணனைக் கொல்ல!

Koviloor Digital Library

அவர்களை எல்லாம் வென்று
அப்புறம் சென்ற போது
மதயானை தனை அனுப்பி
மறித்துமே கொல நினைத்தான்!

கோபாலனோ சண்டை யிட்டுக்
குவலயம் கொன்ற போது
கம்சனின் கண்கள் தன்னில்
கனல்ப்பொறி பறந்த தங்கு!

இன்னும் பலர் அனுப்பி
எதிர்த்திட்டான் பாலர்களை
எல்லோரையும் வென்று மேதான்
ஏகினார் கம்சன் முன்பு!

சிம்மா சனம்வீற் றிருந்த
சிறுமதியோன் கம்சன் தன்னைக்
கண்ணனோ கீழே தள்ளிக்
கழுத்தினை நெறித் திட்டாரே!

தேவர்கள் மலர்கள் தூவி
திருமாலை அர்ச்சித் தார்கள்
கம்சனோ ஒழிந்தான் நமக்குக்
கவலையோ இல்லை என்று!

Koviloor Digital Library

யாருக்கும் பயந்து மேதான்
எம் பெருமான் வாழ்ந்திட் டாரோ
அவன் கதை முடிந்த தாலே
அவர்தம்மை உலகிற் கீந்தார்!

தந்தையைச் சிறையில் வைத்த
தனயனோ மாண்டதாலே
தாத்தாவை அழைத்து மேதான்
தந்திட்டார் ராஜ்யம் தன்னை!

உக்ர சேனனோ சிறையினின்று
ஓடியே வந்து கண்ணன்
பார்த்துமே மிகமகிழ்ந்துப்
பாரினை ஆண்டிட்டாரே!

கம்சனோ இறந்ததாலே
கஷ்டமோ போனதென்று
ஓடிய மக் களெல்லாம்
உடனே ஊர் வந்து சேர்ந்தார்.

Koviloor Digital Library

21. குரு தக்ஷணை

கம்சனோ இறந்ததாலே
கவலையோ இல்லை மக்கள்
உக்ர சேனனின் தேசம் நோகி
ஓடியே வந்தார், போனோர்!

நல்ல நாள் பார்த்துமேதான்
நாராயணர்க் குபநயனம் செய்து
சாந்தீபினி முனிவரிடம்
சகலகலை பயில்வதற்கே

தன்னுடைய மக்களான
தயாநிதி கண்ணன் இராமன்
கொண்டுமே சேர்த்துவிட்டார்
கோபாலன் தந்தை வசுவே!

உலகத்தை அளந்த மாயோன்
உள்ளமோ தெளிந்த வேதம்
பாரினின் வழக்கம் போலப்
பயிலவே அங்கு சென்றார்!

கல்வியோ கற்ற பின்னே
கண்ணனோ ஆசான் பார்த்து
தக்ஷிணை கொடுக்க வேண்டித்
தயங்கியே கேட்க லானார்!

Koviloor Digital Library

எல்லாமே தெரிந்த ஆசான்
இறைவன்தான் கண்ண னென்று,
இறந்திட்ட தன் மகனை
எனக்கே நீர் அருளுமென்றார்!

சரிஎன்று சொன்ன கண்ணன்
வருணனை அழைத்து மேதான்
குருவது பிள்ளை தனைக்
கொணரவும் வழியோ கேட்டார்!

வருணனோ பயந்துபோயே
வார்த்தையோ வாராவண்ணம்
சங்குருவில் வாழுமந்தச்
சமுத்ரன் பாஞ்சஜன்கேளும் என்றார்.

கண்ணனோ கடலோ சென்று
கடும்யுத்தம் செய்தசுரன்
வயிற்றினைக் கிழித்தபோதும்
வழியில்லைக் குமாரன்காண?

தன்னுடை அண்ணன்கூட்டி
தர்மனிடம் சென்றுமேதான்
பாஞ்சசன்யம் எடுத்துஊத
பயந்துமே வந்தார் தர்மர்!

கிருஷ்ணனோ குமாரன் பற்றிக்
கேட்கவே எமதர்மராஜன்
குமாரனைக் கொண்டு வந்து
கொடுத்திட்டார் உடனே அங்கு!

சொன்ன சொல் மாறாக் கண்ணன்
சொந்தமகன் தனைக் குருவிற்கீந்து
என்னுடை தக்ஷணயோ
ஏற்கவும் என்று சொன்னார்.

Koviloor Digital Library

22. கிருஷ்ணன் ஞாபகம்

பாண்டுவோ மறைந்த பின்னே
பஞ்ச பாண்டவர் குந்தியுடன்
அஸ்த்தினா புரத் தினிலே
அமைதியே இன்றி வாழ்ந்தார்!

கண்ணனோ நினைவு கொண்டுத்
தன்னுடைய அத்தை யான
குந்தியைப் பார்க்க எண்ணிக்
கொண்டிட்டார் ஆசை நெஞ்சில்!

அக்ரூரர் சென்று அங்கே
அனைவரையும் கண்டு பேசக்
குந்தியோ ஓடி வந்து
கோவிந்தன் பற்றிக் கேட்டார்!

அஸ்தினா புரம் தனிலே
அவர் படும் துன்ப மதை
விதுரரின் வாய் மொழியாய்
விளக்கினாள் குந்தி தேவி!

Koviloor Digital Library

பாண்டுவின் புத்தி ரர்கள்
பல்வாராய்ப் படும் துயரம்
துரியோத ணன்சூழ்ச்சி எலாம்
சொல்லிட்டாள் மனம் திறந்து

கம்சனைக் கொன்ற கண்ணன்
கடவுளே ஐயம் இல்லை
அவரால்தான் எம்மைக் காக்க
ஆகுமே என்று சொன்னார்!

கண்ணனுக்கு நீரும் சொல்லிக்
கட்டாயம் எம்மைப் பார்த்துப்
பொல்லாத இச்சூழ் நிலையை
புரிந்தருளச் செய்வீர் என்றாள்!

Koviloor Digital Library

23. துவாரகை நிர்மாணம்

கம்சனைக் கொன்ற தாலே
கடும்கோபம் கொண்ட மாமன்
ஜராசந்தன் பகைமை கொண்டு
சதா யுத்தம் தொடுக்க லானான்

கண்ணனோ பார்த்து விட்டுக்
காப்பில்லை மதுரா என்று
விஸ்வ கர்மாவை அழைத்துடனே
வேய்ந்திட்டார் துவார கையை!

கடலின் நடுவினிலே
கட்டிய அத் துவாரகையோ
எல்லா அரண்களுடன்
இருந்ததே மிகச் சிறப்பாய்!

அரண்களோ பல அமைத்து
அகழிகளும் சேர்த்தமைத்து
விண்ணுலக விந்தை யெல்லாம்
விஸ்வகர்மா செய்து வைத்தார்!

கூடங்கள் கோபுரங்கள்
கொண்டாட பல இடங்கள்
வேண்டிய மட்டு மங்கு
விஸ்வகர்மா உண்டு செய்தார்.

Koviloor Digital Library

பாற்கடலில் பள்ளி கொள்ளும்
பரந்தாமன் மெச்சும் வண்ணம்
பவனங்கள் பலசெய்து
பாராட்டும் பெற்று நின்றார்

சாலைகளும் சோலை களும்
சரியாகத் திட்ட மிட்டு
வாயில்களும் தோரணமும்
வடிவாகச் அமைத்திருந்தார்!

கண்ணனோ பார்த்துவிட்டுக்
களித்துமே மனமகிழ்ந்து
வெகுமதிகள் பலவற்றை
விஸ்வ கர்மாக் களித் தார் தாமே!

மதுராபுரி விட்டு வந்த
மக்கள் அனைவருக்கும்
கும்பிடவும் கோவில் பல
குறையின்றிச் செய்துவைத்தார்

மதுராபுரி மக்களெல்லாம்
கொடி யோனுக்குப் பயந்து
கோபாலன் அரவணைப்பில்
குறையின்றி வாழ்ந்து வந்தார்!

துவாரகை வாழும் போதுத்
துணை வேண்டிப் பலராமனும்
ரேவதியை மணந்து கொண்டு
ரக்ஷித்தார் பூவுலகை!

Koviloor Digital Library

24. ருக்மிணி கல்யாணம்

அழகின் இருப் பிடமாம்
ஆதி லெக்ஷ்மி அவதாரத்தாள்
ருக்மிணியின் தங்கை யாக
ருக்மிணியோ அவதரித்தாள்!

பரந்தாமன் திருமாலாகப்
பலருமே புகழும் கண்ணன்
அடையவே வேண்டி மனம்
ஆசையோ மிகவும் கொண்டாள்!

ருக்மிணியின் அண்ணனான
ருக்குமிக்கோ பிடிக்கா வண்ணம்
சேதி நாட்டு இளவரசன்
சிசுபாலனுக்கு முடிவு செய்தார்!

அன்னவளோ! மன முடைந்து
ஆவது ஒன் றறியா வண்ணம்
அந்தணர் ஒருவரைத் தான்
அனுப்பினாள் தூது ஆக!

அந்தணர் சென்று மேதான்
அனைத்துமே கண்ணனிடம் சொல்ல
அடுத்த கணப் பொழுதில்
அழைத்துமே வந்து சேர்ந்தார்!

Koviloor Digital Library

கண்ணனோ வந்த செய்தி
கண்டுமே ருக்மிணி யோ
கவலையே மறந்து விட்டு
கண்ணனிடம் ஓடிச் சென்றாள்!

கண்ணனோ தேரில் ஏற்றி
கடுவெகில்ப் பறந்து செல்ல
எல்லோரும் தேரைப் பார்த்து
ஏமாந்தோம் என்று சொன்னார்!

சிசுபாலனோ விரட்டிக் கொண்டு
சீறிய வண்ணம் சென்று
கண்ணனின் அம்பு முன்னே
கண்டிட்டான் பெரிய தோல்வி!

சிங்கத்தின் உணவு தன்னைச்
சிறுநரியோ கொண்டு செல்ல
எவ்வாறு சகிப்போம் என்று
ஏதேதோ கூறி நின்றான்!

கண்ணனோ துவாரகை சென்று
கல்யாணம் முடித்துக் கொண்டு
திருமாலும் இலக்குமியுமாய்
சேர்ந்தே தரிசனமும் தந்தார்!

Koviloor Digital Library

25. சத்யபாமா கல்யாணம்

சூரியன் கொடுத்த மணி
சொந்த தம்பியோ அணிந்துகொண்டு
வேட்டைக்குச் சென்ற போது
வேங்கையோ அவனைக் கொன்று
மணிதனை எடுத்துக் கொண்டு
மகிழ்ந்துமே செல்கை யிலே
ஜாம்பவான் சண்டை போட்டு
சிங்கத்தைக் கொன்று விட்டு
மணிதனை எடுத்துக் கொண்டு
மகிழ்ந்துமே இருந்திட்டானே!

கண்ணனோ கதை அறிந்து
கடுமையாய்ச் சண்டையிட்டு
ஜாம்பவான் வென்று அந்த
மணியினைத் தானடைய

ஸத்ராஜித் மன்னன் கண்டு
சந்தோஷம் மிக அடைந்து
தன்னுடைய மகளேயான
சத்யபாமாவைக் கண்ணனார்க் கீந்தார்!

Koviloor Digital Library

26. நரகாசுரன்

பூமியின் மைந்தனான
பெரும் கொடியோன் நரகாசுரனோ
இந்திரன் சொத்து எல்லாம்
எதிர்த்துமே கவர்ந்த தன்றி
ஐராவத்தை யுமே
அடைந்திடத் திட்டமிட்டான்!

தேவேந்திரன் ஓடிவந்து
திருக்கண்ண னிடமே சொல்வான்
என்னுடைய சொத்து எல்லாம்
எடுத்தது மட்டுமின்றி
ஐராவதத் தைக்கூட
அடையவே முயற்சிக்கின்றான்!

பெருமானே நீர்தான் எம்மை
பெரும் சூரனிருந்து காத்து
அருள்வாயே என்று கெஞ்சி
அழுதுமே புலம்பி நின்றார்!

எம்பெருமான் புன்னகைத்து
இதை நானே பார்ப்பேன் நீயும்
கவலையை விட்டுவிட்டு
கவனிப்பாய் உன் பணியை என்றார்!

Koviloor Digital Library

தன்னுடைய தேவியான
சத்யாவை அழைத்துக் கொண்டு
அன்னவன் தேசம் நோக்கி
ஐயனோ தேரில்ச் சென்றார்

பரந்தாமனோ கெதைஎடுத்து
பாதகன் கோட்டை தன்னை
உடைத்துமே எரியக் கண்டு
ஓடிவந்திட்டார் பல அசுரர்!

வந்தவர் அனைவரையும்
வாசு தேவனோ தலை அறுக்க
பின்னரே வந்தான் அந்தப்
பெரும் துஷ்டன் நரகாசுரனே!

கண்ணனோ கடும்போர் செய்து
கடைசியில் சக்கரதால்
அசுரனின் தலை அறுக்க
அங்கேயே சாய்ந்தான் மண்ணில்!

Koviloor Digital Library

பூமாதா உடனே தோன்றி
புண்ணியன் நீர், வராகமாகி
என்னையே தொட்ட போது
இவன் பிறந்தான் என்று சொன்னாள்

அன்னவன் கவர்ந்த வற்றை
அனைத்துமே கண்ணன் ஈந்து
புண்ணியனே என்மகனைப்
பொருத்தருள் புரிவீர் என்றாள்.

அசுரனோ இறக்கும் போது
ஐயனைப் புரிந்து கொண்டு
நானிறந்த இந்நாள் தன்னை
நாடறியச் செய்ய நீரும்
தீபாவளிப் பண்டிகையாய்க் கொண்டாட
திருக்கண்ணா வழி செய் என்றான்!

Koviloor Digital Library

27. பாஞ்சாலி சுயம்வரம்

பாஞ்சாலி சுயவரம் தன்னைப்
பார்க்கவே கண்ணன் எண்ணி
பந்துக்கள் அழைத்துக் கொண்டு
பாஞ்சால தேசம் சென்றார்!

துரியோதனன் கர்ணன்
துஷ்டன் சிசுபா லனுடன்
சல்லிய ராஜன் போன்றோர்
சகிதமாய் வந்திருந்தார்!

ஒவ்வொரு இராஜ னாக
ஓடிக்கவோ வில்லதனை
முயற்சிகள் செய்த போது
முடியாது போனார் தாமே!

கர்ணனோ முயன்ற போது
கணக்காக நாண் அறுந்து
பல்லிலே அடிக்கக் கண்டு
பரிகாசப் பட்டுப் போனான்!

துருபத னோ மன முடைந்து
சொன்னான் இவ்வார்த் தைதனை
சத்திரியன் என்று இல்லை
சாத்திரத்துப் பிராமணனோ
எவரேனும் இங்கு வந்து
இதை வளைக்கலாமே என்று!

Koviloor Digital Library

பிராமணன் வேடம் ஏற்ற
பார்த்தனோ அங்கு வந்து
சபையோரின் முன்னிலையில்
சாதிப்பேன் வளைத்து என்றான்.

பிராமணன் வில் வளைத்தல்
பெரும்தவறு என்று சொல்லி
சிசுபாலன் போன்றோர் அங்கே
சீறியே வெகுண் டெழுந்தார்!

பார்த்தனோ வில் வளைத்துப்
பாஞ்சாலி கை பிடித்து
அன்னை குந்தி தேவியிடம்
அழைத்துமே வீடு சென்றான்.

சத்திரியர் தர்ம மதோ
செத்துவிட்ட தென்று சொல்லி
பலவாறாய்ப் பேசியுமே
பதட்டத்தை உண்டு செய்தார்!

பீமனுமே பயந்த வண்ணம்
பெருமரத்தைப் பிடுங்கி வந்து
தம்பியைக் காத்திடவே
தயாராக நின்றிருந்தான்!

Koviloor Digital Library

பரந்தாமன் முன்னிருந்து
பதட்டத்தைத் தடுத்து அங்கு
பாராளும் மன்னர் களைப்
பக்குவமாய் அனுப்பி வைத்தார்!

துருபதன் மகனோ சென்று
தூரத்தே குந்தி பார்த்து
பாண்டவர்கள் தாம் அவர்கள்
பிராமணர் இல்லை என்றான்!

குந்தியோ பார்த்துவிட்டுக்
கொண்டு வந்த தைவருக்கும்
சொந்த மாய்க் கொண்டு மேதான்
சோதனைகள் வெல்லு மென்றாள்!

Koviloor Digital Library

28. இந்திரப் பிரஸ்த்தம்

துரோபதை கல்யாணம் கண்டு
துவண்டுமே போன இராஜன்
பாஞ்சாலன் துணையோ சேரப்
பயந்திட்டான் பாண்டவரை எண்ணி!

இனியுமே பகை வளர்த்தல்
இலை, இலை, நல்ல தென்று
முன்னவர் ஆண்டு வந்த
முழுக்காடு தன்னை ஈந்தார்!

தர்மரை அழைத்து மேதான்
தம்பிமார் துணையோ சேரக்
காண்ட வனமோ சென்று
கவலையின்றி வாழ்வீர் என்றார்!

தர்மனோ மன மகிழ்ந்து
தந்ததைப் பெற்றுக் கொண்டு
தம்பிமார் தாயு டனே
தான் சென்றார் காண்டவனம்!

கண்ணனோ காடழித்துக்
கண்கவர் பட்டிணமாய்
விஸ்வகர்மா அழைத்துடனே
வெகு அழகாய்ச் செய்யுமென்றார்!

Koviloor Digital Library

தன்னுடைய தபத்தி னாலும்
தன்வித்தை பலத்தி னாலும்
விஸ்வகர்மா வந்து டனே
வேண்டுவனச் செய்து வைத்தார்!

பூர்வத்துத் தலை நகரோ
புதர்மண்டிக் காடான
காண்டவனம் அழித்துமேதான்
கட்டிடங்கள் கட்டி விட்டார்!

அஸ்த்தினா புரம் தோற்க
அரண்மனை யோஅங்கு செய்து
தர்மரோ ஆள்வதற்குத்
தந்திட்டார் விஸ்வகர்மா!

இந்திரப் பிரஸ்த மென
இதற்குமே பெயருமிட்டுத்
தந்திரத்தால் மந்திரத்தால்
தலை நகராய்ச் செய்துவிட்டார்!

மயசபை மண்டபமோ
மாதிறனால் செய்து அவர்
தண்ணீர் இருப்பதைப் போல்த்
தரைதனையே அமைத்துவிட்டார்!

சாதாத் தரையினைப் போல்
சற்று தள்ளி அவர் செய்து
தண்ணீரை நிரப்பியுமே
சாகசங்கள் செய்து வைத்தார்!

தன்னுடைய திறமை யெல்லாம்
தர்மருக்குச் செய்ய எண்ணி
வேண்டிய மட்டு மங்கே
வித வித மாய்ச் செய்து வைத்தார்!

Koviloor Digital Library

இதுபோன்ற மயசபையோ
எனக்கிலையே என்றெண்ணித்
துரியோதனன் மனதில்
துயரளிக்கும் விதம் செய்தார்!

பாரதம் முடிப்பதற்கே
பரந்தாமன் துணையாக
மயசபை விந்தை செய்து
மனதிற்குள் பகை வளர்த்தார்

அரண்மனை திறப்பு விழா
அமர்க்களமாய்ச் செய்கையிலே
மன்னர்கள் அனைவருமே
மகிழ்ச்சியாய் வந்திருந்தார்!

ஆள்படை சேனை யுடன்
அங்கு வந்த அரவோனும்
மயசபை கண்ட உடன்
மனதிலே பொறாமை கொண்டான்!

மயசபை நுழைய யிலே
மன்னன் துரியோ தனனோ
தண்ணீர் என எண்ணி
தன் ஆடை ஏந்தி நின்றான்!

தண்ணீரோ இல்லை அந்தத்
தரையேதான் அந்த விதம்
என்றது கண்ட மன்னன்
எவ்வாரோ மாறிவிட்டான்!

முன்னே நடந்த வனோ
முன்போல எண்ணியுமே
தன் ஆடை நனைந்திடவே!
தான் அவமான மானான்!

Koviloor Digital Library

உப்பரிகை மீதிருந்த
உற்றோர்கள் பலர் நகைக்க
பாஞ்சாலி நகைத்ததையே
பகைமையாய் எண்ணி விட்டான்!

பாஞ்சாலன் மகள் என்னைப்
பலர் முன்னால் நகைத் திட்டாள்
பார்க்கிறேன் அவளை என்று
பாம்பாகப் பகைத்துப் போனான்!

கண்ணனோ பார்த்துவிட்டு
எண்ணினார் மனதினிலே
பூபாரம் குறைப் பதற்குப்
போதுமிப் பகையே என்றே!

Koviloor Digital Library

29. சுபத்ரை கல்யாணம்

கண்ணனின் தங்கை யான
கார்குழலாள் சுபத்ரை தன்னை
காண்டீபன் மனதில் எண்ணிக்
கண்ணனிடம் சொல்ல லானான்

கண்ணனோ மகிழ்ச்சி யுற்றுக்
காண்டீபன் தன்னை நோக்கி
சன்யாசி வேடம் கொண்டு
தபநிலை கொள்வாய் என்றார்!
மலைச் சாரலில் தங்கிஉள்ள
மகான் போன்ற அர்ஜுனனைக் கண்டு
பலராமன் மதித்துப் போற்றிப்
பணிவிடைகள் பலவாய்ச் செய்தார்!

அரண்மனைக்கு அழைத்து வந்து
அங்குமே தங்க வைத்து
அன்புநிறை தங்கை தனை
அதிதியைக் கவனி என்றார்.

பழம்நழுவிப் பாலில்ச் சேர்ந்து
பாயசத்தில் விழுந்த தைப்போல்
சுபத்ரையோ சேவை செய்யச்
சுவர்க்கத் தைக்கண்டான் பார்த்தன்!

Koviloor Digital Library

ஓர்நாள் சுபத்ரை வந்து
ஒருவருமே இல்லா நேரம்
குந்தியின் மைந்தர் களில்
குறிப்பாக அர்ஜுனனைக் கேட்டாள்.

அர்ஜுனனோ மன மகிழ்ந்து
அவள் கேட்ட செய்தி பற்றி
தன்முன்னே இருக்கும் நான்தான்
தனஞ்செயன் என்று சொன்னான்!

சுபத்திரையின் மகிழ் வினுக்கோ
சொல்வதற்கு அளவே இல்லை
அர்ஜுனனைத் தெரிந்து கொண்டு
ஆனந்தம் அடைந்து நின்றாள்!

கண்ணனோ கண்டு கொண்டு
கடிமணம் செய்து வைத்து
இந்திரப் பிரஸ்தத் திற்கு
இப்போதே செல்லுமென்றார்!

அர்ஜுனன் இரதமோ ஏறி
அழைத்துமே சுபத்ரை தன்னை
இந்திரப் பிரஸ்தம் சென்று
இயம்பினான் குந்தி யிடம்!

பலராமன் தெரிந்து கொண்டு
பலவாறாய்க் கோபம் கொள்ள
கண்ணனோ எடுத்துரைத்து
கருத்தினை மாற்றி விட்டார்!

கண்ணனும் அண்ணனுமாய்க்
பெண்ணுக்குச் சீர்கள் கொண்டே
இந்திரப் பிரஸ்தம் சென்று
எல்லோரும் ஒன்றா னாரே!

Koviloor Digital Library

30. ஜராசந்தன் யுத்தம்

தர்மரோ தம்பி யுடன்
தாய்குந்தி மனையாளுடனே
இந்திரப் பிரஸ்தம் தன்னில்
இருந்திட்டார் நலமாய் அங்கே!

கண்ணனோ அங்கு சென்று
கண்டுமே தர்மர் தன்னை
ராஜசூய யாகம் பற்றி
யாவுமே கேட்ட றிந்தார்!

கண்ணனோ தர்மர் சொல்வார்
கட்டாயம் செய்ய வேண்டும்
எல்லோரும் அடிபணிவார்
எதிர்ப்பானே ஜராசந்தன் என்றார்!

அன்னவனை வென்றால் அன்றி
அது நடக்க வழியே இல்லை
தர்மரே கவலை வேண்டாம்
தாம் செய்து முடிப்போம் என்றார்!

காண்டீபன் பீமனையும்
கண்ணனுடன் அனுப்பி வைத்தால்
என்னாலே முடியும் வெல்ல
இதற்குமே சரிசொல் என்றார்!

Koviloor Digital Library

தர்மரோ கேட்டு விட்டுத்
தாங்காது மனம் வருந்தி
என்னுடை கண்கள் ரெண்டும்
எவ்வாறு ஈவேன் என்றார்!

யாகமோ வேண்டாம் கண்ணா
இதை நானோ மாற்றிக் கொள்வேன்
பூமியோ வேண்டாம் கண்ணா
பொறுக்கேன் தம்பி அனுப்ப என்றார்!

அர்ஜுனன் உடனே செல்வான்
அண்ணனே கவலை வேண்டாம்
சத்திரியர் வாழ்வில் நாமோ
சாகசம் செய்தல் முறையே!

கண்ணனின் துணை யிருக்கக்
கவலையே வேண்டாம் அண்ணா
அன்னவன் வென்று மேதான்
அதிவிரைவில் வருவோ மென்றார்!

ஆசை ஓர்புற மிருக்க
அதிஅன்பு மறுபுற மிருக்கக்
கூடிய தர்மன் சொல்வார்
கோவிந்தா, பார்த்து என்றே!

கண்ணனோ அழைத்துக் கொண்டு
கடிந்துமே மகதம் சென்று
அந்தணர் வேடம் பூண்டு
ஆசையைச் சொல்ல லானார்!

தம்மொடு யுத்தம் செய்ய
தமக்குமோ நெடுநாள் ஆசை
ராஜனே ஒப்புக் கொண்டு
ஆசையை நிறைவேற் றென்றார்!

Koviloor Digital Library

பிராமணர் பார்த்த சந்தன்
யாரெனக் கண்டு கொண்டு
சத்ரியன் தர்மம் போலச்
சரி என்றான் சண்டை செய்ய!

கண்ணனோ மகிழ்ந்த வண்ணம்
காண்டீபன் பீமன் காட்டி
ஜரா சந்தன் முன்னே வந்து
யாரைநீர் தேர்வாய் என்றார்

கண்ணனே! நீயோ ஆயன்
காண்டீபன் சின்னப் பிள்ளை
பீமனே சரியோன் உம்மில்
பெரும்யுத்தம் செய்ய என்றான்.

பதினைந்து நாட்கள் போரோ
பலமாக நடந்த போது
பீமனோ கொல்லக் கொல்ல
பிறகுமே உயிர் பெற்றானே!

கண்ணனோ பார்த்து விட்டுக்
கண்அசைத்துப் பீமன் பார்த்து
புல்லினை எடுத்து மேதான்
கிள்ளியே மாற்றிப் போட்டான்!

பீமனோ பார்த்து விட்டுப்
பிய்த்திட்ட அவனுடலை
மாற்றியே தலை கால்போட
மரணமோ அடைந்தான் மன்னன்!

ஐம்பெரும் பலவான் ஆன
அர்ஜுனன் அண்ணன் பீமன்
வீட்டிற்கு ஒருவ ரென்று
விருந்துண்ட பகா சுரன்

Koviloor Digital Library

விராட இராஜனின் மைத்துனனாம்
வீராதி வீரன் கீசகன்
கம்சனின் மாமனான
கதாயுத்த ஜராசந்தன்
அஸ்த்தினா புறத்து வேந்தன்
ஆவரே ஐந்து பேராம்!

ஐவரில் எவரொருவர்
யார்கையால் சாகின்றாரோ
அவர் கையால் மாண்டிடுவர்
அடுத்துள்ள மூன்று பேரும்
என்கின்ற வரத்தைப் பெற்று
ஏகத்தில் வாழ்ந்த பேர்கள்!

Koviloor Digital Library

31. சிசுபாலன் வதம்

இந்திரப் பிரஸ்தம் சென்று
எம்பெருமான் தலைமை ஏற்று
தன்மரின் யாகம்தன் னைத்
தடையின்றித் துவக்கி வைத்தார்

யாகத்தின் வழக்கம்போல
யாருக்குப் பூஜை என்று
பல பேரும் கேட்டு நிற்கப்
பதில்ச் சொன்னான் சகாதேவன்.

என்னவோ பெரும் வேடிக்கை
ஏதேதோ பேசு கின்றீர்
திருக் கண்ணன் இருக்கும்போது
சிந்தித்தல் முறையோ என்றாள்.

கிருஷ்ணனுக்குப் பூஜை என்று
கேட்டிட்ட சில ராஜாக்கள்
முகமதை மாற்றிக் கொண்டு
முனங்கினார் சிசு பாலனோடு!

சிசுபாலன் எழுந்து நின்று
செய்தது சரியே அல்ல
கண்ணனோ யாரோ இந்தக்
காரியம் செய்ய என்றான்!

Koviloor Digital Library

பீஷ்மரும் துரோணரும் நம்
பெரும்மன்னன் விதுரனாரும்
சபையிலே இருக்கும் போது
சரியல்ல இச்செயலே என்றான்!

அரசர்கள் இருக்கும் போது
ஆட்டிடைக் கண்ணனுக்கு
முதல் மரியாதை செய்தல்
முற்றிலும் தவறு என்றான்.

இன்னமும் பல வாறாக
இறைவனைப் பற்றிப் பேச
சகாதேவன் எழுந் துடனே
சண்டைக்குச் செல்ல லானான்!

கண்ணனோ தடுத்து விட்டுக்
கவலையே வேண்டாம் தேவா
நானே போய் அவனழிப்பேன்
நடப்பதைப் பார் என்று சொன்னார்.

Koviloor Digital Library

அன்னவன் தாய்க்கு நானும்
அளித்திட்ட வரத்தைப் போல
நூறு பிழை பொறுத்திருப்பேன்
நோகாதே என்று சொன்னார்.

கண்ணனோ கோபம் கொண்டு
கடிந்து தன் சக்கரம் ஏவ
அன்னவன் தலையோ கொய்து
அவரிடம் வந்த தங்கே!

ஜெயவிஜயன் அவதா ரத்தோன்
திருமா லால்ப்பழியோ தீர்க்க
முன்சாபம் தீர்ந்து போயே
முன்போலப் பாற்கடலோ சென்றான்.

தர்மரின் ராஜ சூயம்
தடையின்றி நடந்தேற
வந்தவர் பலரும் சேர்ந்து
வாழ்த்துக்கள் கூறி னாரே!

Koviloor Digital Library

32. கண்ணனின் குசேலர்

இருபத்து ஏழு பிள்ளை
எவ்வாறோ பெற்ற நண்பன்
ஏழ்மையின் காரணத்தால்
எம்பெருமான் காண வந்தார்.

குசேலனின் தர்ம பத்னி
கோபாலன் பார்த்து மேதான்
குறைதனைச் சொன்னால் ஏதும்
கொடுப்பார் எனஅனுப்பி வைத்தாள்.

இல்லாத நிலை தனிலும்
ஏதேனும் கொடுக்க எண்ணி
அவல் கொஞ்சம் மூட்டைகட்டி
அனுப்பினார் கண்ண னுக்கே!

துவாரகை சென்ற நண்பன்
தூரத்தே கண்டு கொண்டு
ஓடியே அணைத்துக் கண்ணன்
உள்ளேயே அழைத்துச் சென்றார்!

நீண்டநாள் கழித்து நண்பன்
நினைவுடன் வந்தான் என்று
கண்ணனோ மன மகிழ்ந்து
காட்டினான் ருக்மிணிக்கே!

Koviloor Digital Library

குசேலரை அழைத்துவந்து
கொண்டாடிக் கதைகள் கேட்டு
நண்பனே முடிச்சி லென்ன
நானறியா லாமா என்றார்!

குசேலரோ வெட்கப் பட்டுக்
கொடுத்திட்டார் அவல் முடிச்சை
கண்ணனோ பார்த்து விட்டுக்
களிப்புடன் தின்ன லானார்!

அண்ணியோ கொடுத்த பண்டம்
அறுசுவை மிகுந்த தென்று
அள்ளியே மறுகை தின்ன
ஆதி லக்ஷ்மியோ தடுத்து நின்றாள்!

ஏதேதோ கேட்க எண்ணி
எம்பெருமான் தேடி வந்தோர்
வந்ததை மறந்து விட்டு
வருகின்றேன் கண்ணா என்றார்!

கண்ணனும் வழியனுப்பிக்
காட்டியே கருணை தன்னை
ஏழையின் வீடு மொத்தம்
எவ்வாறோ மாற்றி விட்டார்!

வீட்டிற்குச் சென்ற நண்பன்
விழித்திட்டார் மாற்றம் கண்டு
குழந்தைகள் வீடு மொத்தம்
கொழிக்கின்ற செல்வம் கண்டு!

நண்பனை நினைத்த வண்ணம்
நாள்பல வாழ்ந்து நன்கு
பரந்தாமன் கருணை தன்னைப்
பாராட்டி மகிழ்ந்திட்டாரே!

Koviloor Digital Library

33. திரௌபதிக்குத் துகில் கொடுத்தல்

தர்மரோ சூது ஆடித்
தன்சொத்து எல்லாம் தோற்று
மனையாளும் தோற்ற வண்ணம்
மனமுடைந்து நின்றா ராமே!

துரோபதியை இழுத்து வந்து
துச்சாதனன் சபை நடுவே!
துகிலுறிந்து மானபங்கம்
துணிவாகச் செய்யும் வேளை
பீஷ்மரும் துரோணர் மற்றும்
பெரியோர்கள் அனைவருமே
பார்த்துமே செயல் இழந்தார்
பலவாராய் அவள் புலம்ப!

முடியாத நிலைக்குத் தள்ள
முழுமையாய்க் கண்ணன் வேண்டி
கோவிந்தா! காப்பீர் என்று
கூட்டத்தில் கதறி நின்றாள்!

பரந்தாமன் செவியில் கேட்டு
பதைத்துமே நொடிப் பொழுதில்
துகிலுரியும் கைகள் சோரத்
துணிதன்னை ஈந்திட் டாரே!

Koviloor Digital Library

சபைமொத்தம் துணிகளாகச்
சான்றோர்கள் மனம் குளிர
துச்சாதனன் இழுத் திழுத்து
துவண்டுமே மயங்கி வீழ்ந்தான்!

துரோபதை மானம் காத்துத்
துயர் தன்னைத் தீர்த்த கண்ணன்
பெருமையை உணர்ந்தோர் அந்தப்
பெரியோர்கள் பீஷ்மர் போன்றோர்!

பாஞ்சாலி சபை நடுவே
பலவாறாய் இம்சை செய்த
கொடியவன் துச்சா தனனைக்
கூற்றமாய்ச் சாபம் இட்டாள்!

கூந்தலைப் பிடித் திழுத்த
கொடிய இத் துச்சாதனன்
குருதியைத் தேய்த்து மேதான்
கூந்தலை முடிப்பேன் என்றாள்!

பாவி துரியோதனனாம்
பாம்பது உடல் பிளந்து
அவனது ரத்தம் சேர்த்து
அவிழ்ந்திட்ட கூந்தல்கட்டிச்
சீவியே இனி முடிப்பேன்
செய்யேன் நான் அதற்குள் என்றாள்!

Koviloor Digital Library

துரௌபதி சபதம் கேட்டுத்
தூயவர் எலாம் நடுங்க
அரவோனின் தந்தை மாமன்
அம்மையே பொறுப்பாய் என்றார்!

தேவர்கள் வருந்தி னாலும்
திருக்கண்ணன் சபதம் தீர்க்க
ஆனதே வசதி என்று
ஆனந்தம் அடைந் திட்டாரே!

துணியினைப் பார்த்த பின்னும்
துஷ்டர்கள் மாற வில்லை
என்னவோ இதயம் அவர்க்கு
இரும்பினும் கடின மாமோ!

Koviloor Digital Library

34. பரந்தாமன் பசி

துருவாச முனியோ வந்து
துரியோ தனன் பார்த்த போது
பலவாராய்ச் சேவை செய்து
பாராட்டுப் பெற்றான் மன்னன்!

முனிகளோ மிக மகிழ்ந்து
முன்னவன் பார்த்துக் கேட்டார்
அரசே யாம்மிக மகிழ்ந்தோம்
அளிப்போம் கேள்வரமே என்றார்!

சூழ்ச்சியே உருவ மானோன்
துயர் கொடுக்க வேண்டி எண்ணி
அய்யனே எம்போல் நீவிர்
அருள்வீர் பாண்டவர்க்கே என்றான்

வனத்திலே வசிப்ப வர்கள்
வழியிலா நிலையில் முனிவர்
கேட்பதைக் கொடுக்க இயலாக்
கெட்டுமே போவார் என்றே!

முனிவரோ காடு சென்று
மூத்தவர் தர்மன் பார்த்து
விருந்திற்கு வருகின்றோம் யாம்
வேண்டுவனச் செய் என்றிட்டார்!

Koviloor Digital Library

முனிவரின் கோபத் திற்கு
முன்நிற்க வேண்டா மென்று
ஐயனே சென்று வாரும்
அனைத்துமே செய்வேன் என்றார்!

வீட்டிலே ஏதும் இன்றி
வெறும் சட்டி ஆகிப் போக
பாஞ்சாலி பயந்து போயே
பரந்தாமன் வேண்டி நின்றாள்

கண்ணனோ உடனே வந்து
கடும்பசி என்று சொல்லி
அன்னவள் துயரம் தன்னை
ஆக்கினார் பல மடங்காய்!

அண்ணனே என்ன செய்வோம்
அபலைகள் காட்டில் வாழ்வோர்
உன்பசி தீர்க்க வேண்டி
ஒன்றுமே இல்லை என்றாள்!

கண்ணனோ விடாது சென்று
கழுவிய பாத்திரத்தில்
ஒட்டிய கீரைச் சோற்றை
உண்டுமே பசியோ தீர்த்தார்!

Koviloor Digital Library

குளித்துமே முடித்த அந்தக்
கொடும்பசி முனிவர் கூட்டம்
வயிறுகள் நிறைந்து போயே
வாயார ஏப்பம் விட்டார்!

பரந்தாமன் பீமன் நோக்கி
பார்த்துமே வருவாயென்று
சொல்லியே அனுப்பி வைத்தான்
சூதினை வென்ற கண்ணன்!

பீமனோ சென்று அங்கு
பிரியமாய் முனிவர் அழைக்க
அப்பனே பசியே இல்லை
அடுத்த முறை வருவோம் என்றார்!

பாஞ்சாலி மன மகிழ்ந்தாள்
பரந்தாமன் கருணை எண்ணி
முனிவர்கள் கோபம் நின்று
முற்றிலும் காத்த மைக்கே!

Koviloor Digital Library

35. ஸ்ரீ கண்ணன் தூது

சாலவனைப் போரில் வென்று
மாலவன் வந்த போது
அஸ்த்தினா புரத்துச் செய்தி
அறிந்துமே கவலை கொண்டார்.

பாண்டவரைப் பார்க்க எண்ணிப்
பலரையும் அழைத்துக் கொண்டு
பரந்தாமன் சென்றார் அந்தப்
பாண்டவர் வனத்தை நோக்கி

யுத்தமோ வரும் நிலையில்
யுதிஷ்டிரரோ கண்ணன் நோக்கி
ஏதேனும் வழியிருந்தால்
இதனைநீர் தவிர்ப்பீர் என்றே!

கண்ணனோ நகைத்த வண்ணம்
கடைசியாய் முயற்சி செய்து
அஸ்த்தினா புரமே சென்று
அவர்களைப் பார்ப்பேன் என்றார்!

பீமனும் கண்ணன் முன்பு
பெருமானே யுத்தம் வேண்டாம்
பேரழிவு வேண்ட வேண்டாம்
பிழைக்கட்டும் அவர்கள் என்றார்!

Koviloor Digital Library

பதிகளின் பேச்சைக் கேட்டுப்
பாஞ்சாலி ஓடிவந்து
அண்ணனே என் நிலையை
அறிந்துமா பேசுகின்றார்!

என்னுடை அவிழ்ந்த கூந்தல்
என்றுதான் முடிப்பேன் அண்ணா
புண்ணிய பேச்சு எல்லாம்
பேசவும் லாமா என்றாள்!

சபையினில் துயில் உரிந்த
சண்டாளன் கொல்வ தன்றி
யுத்தமோ வேண்டாமென்று
உரைப்பதும் முறையோ என்றாள்!

ஐந்துபேர் இலை எனினும்
அபிமன்யு பாலர் சூழ
அஸ்த்தினா புரமழித்து
அன்னையைக் காப்பார் என்றாள்!

இத்துனை நடந்த பின்னும்
எதற்கு நீ போரோ என்றால்
தங்கைஎன் சபதம் தீர்க்கத்
தயாநிதி வழிசொல் என்றாள்!

கண்ணனோ அனைத்தும் கேட்டுக்
கண்மணி கலங்க வேண்டாம்
நடப்பவை நடந்தே தீரும்
நானிருக்கப் பயமே னென்றார்!

கண்ணனோ தேற்றி விட்டுக்
கண் துடைப்பாய்ப் போவேன் தூது
கட்டாயம் போரோ உண்டு
கவலையோ வேண்டாம் என்றார்!

Koviloor Digital Library

கண்ணன் வருவதனைக்
காதிலே கேட்ட மன்னன்
வண்ண விளக்குகளை
வழியெல்லாம் போடச் சொன்னார்

தெருவெல்லாம் தோரணங்கள்
திருமாலை வரவேற்க எண்ணி
வாணங்கள், வெடி முழங்க
வாழ்த்துக்கள் பாடச் சொன்னார்!

தேரினை அனுப்பி யுமே
திருக்கண்ணன் அழைத்துவர
ஆவன செய்யும் வண்ணம்
அரசாணை போட்டான் மன்னன்!

கண்ணனோ வந்தவுடன்
மன்னன் திருத ராஷ்டிரனோ
என்னவோ தன்னை மீறி
ஏதேதோ செய்து நின்றார்!

துரியோதனன் வந்து கண்ணன்
விருந்துக்கு அழைத்த போது
பேச்சுக்கள் முடிந்த பின்னே
பெரும் விருந்து உண்போம் என்றார்!

விதுரரின் வீடு சென்று
விருந்துண்டு இரவு தங்கிக்
காலைப் பொழுதி லங்கு
கண்ணனோ மீண்டும் வந்தார்.

கண்ணனோ சென்றமர்ந்து
கதைகளோ பலவும் பேசி
போரினைத் தவிர்ப்ப தற்கே
புத்திகள் பலவும் சொன்னார்.

Koviloor Digital Library

பாண்டவர் ஆள்வ தற்கே
பாதிராஜ்யம் கொடுத்துப்
பகைதனை ஒழித்துவிட்டுப்
பாங்காக வாழும் என்றார்!

இராஜியம் கொடுப்பதற்கே
இலைமனம் என்று சொன்னால்
ஐவரும் வாழ்வ தற்கே
ஐந்து ஊர்கொடுத் தால்கூட
அவர்களைச் சரிசெய்தே நான்
அமைதியைக் காப்பேன் என்றார்.

அதற்குமே மனமிலாது
அவர்கட்குத் தர மறுத்தால்
ஆளுக்கொரு வீடுதந்து
அவர்வாழச் செய்யுமென்றார்!

பீஷ்மரும் துரோணர் மற்றும்
பேரரசு திருத ராஷ்ட்டிரனும்
கண்ணனோ சொல்வதைப் போல்க்
கட்டாயம் செய்யு மென்றார்!

மன்னனோ எடுத்துச் சொல்லி
மகன் துரியோ தனன்பார்த்து
வீரனே கொடுத்து நீயும்
விவேகமாய்ப் பிழை என்றிட்டார்!

பாண்டவர் பகை எதற்குப்
பகவானின் சொல்லைக் கேட்டு
பாரிலே பேரரசாய் நீ
பலகாலம் வாழ்க வென்றார்!

Koviloor Digital Library

துரியோதனன் அங்கே வந்து
தூயவன் கண்ணன் நோக்கி
''ஊசிமுனை'' இடமே கூட
ஓர்போதும் தாரேன் என்றான்.

கண்ணனைத் துன்புறுத்திக்
கடிந்துமே சொற்கள் பேசி
உன்னாலே முடிந்தால் நீயும்
யுத்தத்தில் பாரென் றிட்டான்!

பாண்டவர் சினேகிதன் நீ
பால் விற்கும் கோகுலன் நீ
சத்ரியர் தர்மங்களில்த்
தலையிடவும் வேண்டாமென்றான்.

கண்ணனைக் கொல்வதற்கே
கடும் சூழ்ச்சி செய்து மேதான்
தன்னவர் துணையே கொண்டு
தயாரானான் துரியோதனனே!

கண்ணனோ தெரிந்து கொண்டு
காதகன் துரியோதனன் பார்த்து
தனிமையாய் வந்த தாலாத்
தலைக் கனம் கொண்டாய் என்றான்?

தன்னுடைய விஸ்வரூபம்
மன்னவர் விதுரன், பீஷ்மர்
இன்னுமோ திருதராஷ்டிரன், துரோணர்
இவர்கட்குக் காட்டிநின்றான்!

அன்னவர் கண்களுக்கு
அர்ஜுனன் பீமன் மற்றும்
அனைவரும் துணையாய்நிற்க
ஐயனே பொறுப்பீர் என்றார்!

Koviloor Digital Library

மாயவன் மனமோ வெந்து
மரணமோ தப்பா தென்று
போய்வந்து பார்ப்பேன் உன்னைப்
போரிலே என்று சென்றார்!

விதுரரோ பின்னே சென்று
வீணர்கள் சொற் கேளார்கள்
ஐயனேதன் உள்ளம் போல
அதர்மத்தை அழியு மென்றார்!

நந்தகோபாலனோ தர்மர்பார்த்து
நடந்தவை எல்லாம் சொல்லி
யுத்தத்திற் கானவற்றை
உடனேயே செய்யுமென்றார்!

பாஞ்சாலி தன்னைப் பார்த்து
பாவியர் அழிவார் திண்ணம்
தன்னுடைய கூந்தல் கட்டும்
தருணமோ வந்த தென்றார்!

Koviloor Digital Library

36. ஸ்ரீ கண்ணன் சபதம்

தர்மரைப் பார்த்துப் பேசி
தயாநிதி கண்ணன் சொல்வார்
பூமியோ குடிக்கப் போகும்
பொல்லாதோர் குறுதி என்று!

தர்மரும் பீமருமே
தனஞ்செயன் கூடச் சேர்ந்து
யுத்தமோ எதற்குக் கண்ணா
ஒழியட்டும் அவர்வழியே என்றார்!

பேச்சுக்கள் முடிந்த பின்னே
பேரரசி பாஞ்சாலி சொல்வாள்
ஒற்றைத் துணி உடுத்தி
ஓரத்தில் இருந்த போது
துச்சாதனன் இழுத்து என்னைத்
துயிலுறிந்து கொடுமை செய்தான்!

சூதிலே வென்றிட் டாலும்
சொந்தத்தை எண்ணிக் கூட
செய்வது தவறு என்று
தெரிந்தோரும் கூறவில்லை!

பீஷ்மரும் துரோணர் போன்ற
பெரும் பெரும் மன்னர்களும்
அன்னவர் மருமகள் நான்
அதைக்கூட எண்ணவில்லை!

Koviloor Digital Library

பலசாலி பீம னாரும்
பார்த்தனின் காண்டீ பமும்
யுதிர்ஷ்டிரரில் கட்டுப் பட்டு
ஒன்றுமே பேச வில்லை!

துருபதன் ராஜ புத்ரி
துய்மனின் உடன் பிறப்பை
பாண்டவர் முன் நிலையில்
பலவாராய்க் கேலி செய்தார்!

யுதிஷ்டிரரோ தர்மம் வேண்டி
யுத்தமோ வேண்டா மென்றால்
புத்திரர் துணையோ கொண்டு
போர்செய்து வெல்வேன் அண்ணா!

என்னுடை அவிழ்ந்த கூந்தல்
எவ்வாறு முடிய வேண்டும்
என்பதை நானறி வேன்
யாருமே வேண்டாம் அண்ணா!

பதிகளோ இலை எனக்கு
பந்துக்கள் யாரு மிலை
அண்ணனும் இலை எனக்கு
அநாதையாய் நின்றேன் அன்று!

என்றது கேட்ட கண்ணன்
இதயமோ வெடித்த வண்ணம்
தங்கையின் கண்துடைத்துத்
தாங்குவாய் தாயே என்றார்!

உன்னையே வதைத்தவர்கள்
ஒழிவார் இப்பூமி தன்னில்
கண்ணீரில் நனைந் ததைப்போல்
சென்னீரில் நனைவார் என்றார்!

Koviloor Digital Library

உன்னுடைய அவிழ்ந்த கூந்தல்
உடனே நீ முடிவதற்கு
துச்சாதனன் ஆக்கைச் செந்நீர்
தூயவளே தருவேன் என்றார்!

நடந்ததை மறந்து விடு
நானிருந்தால் நடக்கா தன்று
துஷ்டர்கள் அழிப்பதற்கே
தோன்றினேன் அன்றோ என்றார்!

என்னை நீ புரிந்து கொள்வாய்
எல்லாமே நான்தான் அம்மா
சொல்வது கண்ண னம்மா
சுடர்ஒளியே அமைதி என்றார்!

பாண்டவர் மறுத்த போதும்
பாலர்கள் மறுத்த போதும்
பாஞ்ச ஜன்யம் ஒன்றே போதும்!
பாவியர் கொல்ல என்றார்!

நேரத்தைப் பார்த்துக் கொண்டு
நினக்காகக் காத்து உள்ளேன்
போரது நடக்கும் போது
நேரில் நீ பார்ப்பாய் என்றார்!

பாண்டவர் துணை இருப்பேன்
பழிதீர்ப் பேன் வஞ் சித்தோரை
பூமியே இரண்டா னாலும்
பொய்யாது வார்த்தை என்றார்!

அவிழ்ந்திட்ட கூந்தல் தன்னை
அள்ளியே முடிப்பா யம்மா
அப்பொழுது நீயும் பார்ப்பாய்
யார் இந்தக் கண்ண னென்றே!

Koviloor Digital Library

37. கர்ணன் கவச குண்டலம் கவர்தல்

கவச குண்டலங் களுடனே
கர்ணனோ பிறந்திருக்க
கண்ணனோ அதை நினைத்து
கவலையோ மிகவும் கொண்டார்!

பாரத யுத்தம் தன்னில்
பார்த்த னைக் காப்பதற்கு
கவசமோ உடனிருந்தால்
கஷ்டமே எனநினைத்தார்.

நேரமோ பார்த்திருந்தார்
நெடுமாலோ அவை பறிக்க
கர்ணனின் வளர்ச்சி தன்னில்
கண்ணாக இருந்த கண்ணன்
வள்ளலாய் வளர் வதையே
வாய்ப்பாக எடுத்துக் கொண்டார்!

கேட்பது இல்லை என்று
கேட்பார்க்குச் சொல்லும் கர்ணன்
போக்கினைப் புரிந்து கொண்டு
போட்டிட் டார்திட்டம் தன்னை!

தேவேந்திரனை அழைத் துமேதான்
திருக்கண் ணன்சொல்லி விட்டார்
அந்தணர் உருவம் கொண்டு
அவைகவர்ந்து வருவீர் என்றே!

Koviloor Digital Library

யாசகம் கேட்க வேண்டி
யோசனைகள் பலவும் செய்து
கர்ணனின் வாசல் சென்று
காத்திட்டார் அழைப் பிற்காக!

கர்ணனிடம் வந்து மேதான்
காவலர்கள் சொல்லி நிற்க
உள்ளே அழைத்துவர
உத்தரவு இட்டார் கர்ணன்!

அப்பொழுது அசரீரி தோன்றி
'அப்பா, என்மகனே கர்ணா
இந்திரன் சூழ்ச்சி இது
ஈயாதே கவசம்' என்றார்!

அந்தணனோ உள்ளே வந்து
அவரிடம் வேண்டி நின்றார்
ஆசையே எனக்கு ஒன்று
அருள்வாயே கர்ணா என்று!

இந்திரன் வந்து முன்னே
ஈயென்று கேட்ப தாலே
கர்ணனோ மிக மகிழ்ந்து
கழட்டவே சித்த மானான்!

Koviloor Digital Library

வயசான கால மதே
வந்திட்டீர் கால்கள் நோக
ஐயனே உமக்கு என்ன
ஆசையோ சொல்வீர் என்றான்!

தானணிந்த கவச மதை
நானணியத் தானே ஆசை
கடைசிஎன் ஆசை தன்னைக்
கட்டாயம் தீர்ப்பாய் என்றான்!

கர்ணனோ மிக மகிழ்ந்து
கழட்டியும் அனைத்தையுமே
தட்டிலே வைத்தெடுத்து
தந்தேன் தேவேந்த்ரா என்றான்.

ஐயனே நீவிர் வேண்டின்
அனைத்துமே தருவேன் நானே
கவசமும் குண்டலமும்
கணக்கா உம்நிலையில் என்றான்!

தன்னுடைய சுய உருவம்
மன்னர்க்கு அவரும் காட்டி
வஜ்ராயுதம் பரிசளித்து
'வருகின்றேன் கர்ணா' என்றார்!

Koviloor Digital Library

கண்ணனோ தெறிந்து கொண்டு
காரியம் கெட்ட தென்று
இந்திரனைத் திட்டி யுமே
எதற்கீந்தாய் வஜ்ராயு தமென்றார்!

ஐயனே அந்நிலையில்
ஆகவிலை மனமோ கல்லாய்
என்னையும் அறியா வண்ணம்
ஈந்திட்டேன் தவறு என்றார்!

கண்ணனோ கவலை கொண்டு
காண்டீபனைக் காக்க எண்ணி
இந்திரன் வஜ்ராயுதத்தை
எவ்வாறோ மாற்றிக் கர்ணன்
கடோர்கஜனைக் கொல்ல வைத்துக்
காத்திட்டார் காண்டீபன் தன்னை!

பால்குணனைக் காப்பாற்ற வேண்டி
பரந்தாமன் முயற்சி செய்து
கர்ணனின் ஆயுதங்கள்
கண்டுமே அழித்து வந்தார்!

Koviloor Digital Library

38. கர்ணனுக்குப் பிரம்மாஸ்திரம் மறக்கச் செய்தல்

சத்ரியன் அழிக்க வேண்டிச்
சாகும்வரை விரதம் கொண்ட
பரசு ராமனிடமே சென்று
பிராமணன் என்று சொல்லி
பொய்யான தகவல் தந்து
போர்க்கலை பயின்றான் கர்ணன்!

பிரம்மாஸ்திரம் கற்க வேண்டி
பேராசை கொண்ட கர்ணன்,
பார்த்தனை அழிப்பதற்கே
பலவாறாய் முயன்று வந்தான்!

பிரம்மாஸ்திரம் பயின்றபின்னே
பெரும் முனியோ மடியில்த் தூங்க
கர்ணனோ தாங்கிக்கொண்டு
காண்டீபனை நினைத்தே வாழ்ந்தான்!

கண்ணனோ தெரிந்துகொண்டு
கவலையோ மிகவும் கொண்டு
பிரம்மாஸ்திரம் பறிக்க வேண்டி
பெரியதோர் திட்டம் போட்டார்!

கண்ணனோ வண்டாய்மாறிக்
கர்ணனின் தொடை நடுவே
ஆழமாய்த் துளையோ போட்டு
அப்பக்கம் பறந்து சென்றார்.

Koviloor Digital Library

வேதனை மிகுந்த போதும்
வீரனோ தாங்கிக்கொண்டு
முனிவரோ விழிக்கா வண்ணம்
முயன்றுமே பொறுத்திருந்தார்!

குறுதியோ நதியைப் போலக்
கொட்டவே முனி நனைந்து
கண்களோ விழித்துப் பார்க்கக்
கர்ணனோ நடுங்கிப் போனான்.

முனிவரோ கர்ணனைப் பார்த்து
முற்றிலும் கோபப் பட்டு
கர்ணா! உன் பிறப்பு என்ன?
கட்டாயம் சொல் என் றிட்டார்!

சத்ரியன் தன்னால் தானே
தாங்கவும் இது இயலும்
பிராமணன் அல்லன் நீயே
பேசிடு உண்மை என்றார்!

கர்ணனோ பயந்து போயே
கண்ணில் நீர்ஒழுகச் சொல்வான்
ஐயனே சத்ரியன் தான்,
அல்லநான் பிராமணனே என்றே!

தங்களின் கலைகள் கற்கத்
தாங்காத ஆவல் தன்னால்
பொய் சொல்லிச் சேர்ந்தேன் என்னைப்
பொறுத்துமே அருள்வீர் என்றான்!

பரசுவோ கோபம் கொண்டு
பாவிநீ சத்ரியன் தானா
சத்ரியனை அழிக்க அன்றோ
தரணியில்ப் பிறந்தேன் என்றார்!

Koviloor Digital Library

பொய்சொல்லிப் பயின்ற அந்தப்
போர்க்கலைகள் அனைத்து மேதான்
"தேவைப் படும்பொழுதுனக்குத்
தெரியாது போம்" என்றாரே!

கர்ணனோ கால்கள் பற்றிக்
கதறினும் முனிவர் உள்ளம்
கருணையே இலாது போகக்
கற்றவை மறக்க லானான்!

காண்டீபனை கொல்வதற்கே
கடும்தபம் செய்து பெற்ற
பிரம்மாஸ்திரம் போனதாலே
பெரிதுமே துயர முற்றான்!

கர்ணனை அழிக்க வேண்டிக்
கார்வண்ணன் செய்த சூழ்ச்சி
கணக்காக முடியக் கண்டு
கண்ணனோ அமைதி கொண்டான்!

Koviloor Digital Library

39. கர்ணன் பிறப்பறிதல்

அங்க தேச ராஜன்
அருமைநல் கர்ணன் உந்தன்
புத்திரன் தானே அத்தை
புரிகிறதா நினைப்பீர் என்றார்.

கன்னியாய் இருந்த போது
கதிரவன் மந்திரம் சொல்ல
புண்ணியன் அவ தரித்தான்
புவியிலே உன் வயிற்றில்!

ஊருக்குப் பயந்து நீயும்
ஓடிடும் நதியில் விட்டு
யாருக்கும் தெரியா வண்ணம்
இருந்திட்டாய் இதுநாள் வரைக்கும்

தண்ணீரில்ச் சென்ற வனைத்
தடுத்தெடுத்துக் குதிரைக் காரன்
பிள்ளையோ இலா நிலையில்
போற்றியே வளர்த்து வந்தான்!

சபையிலே சண்டை வந்து
சத்ரியன் அல்லன் என்று
பெரியோர்கள் தடுத்த தாலே
பெற்றானே அங்க தேசம்!

Koviloor Digital Library

துரியோ தனன் செய்த அந்தச்
சூழ்ச்சியால் கர்ணன் இன்று
பாம்பாக வளருகின்றான்
பாண்டவர் அழிப்பதற்கே!

செஞ்சோற்றுக் கடனைத் தீர்க்க
சேராத இடமோ சேர்ந்து
வஞ்சனைக் கூட்டம் தன்னில்
வாழ்கின்றான் விதியி னாலே

நீயுமே அங்கு சென்று
நின்மகன் கர்ணன் பார்த்து
கூட்டியே வந்து விட்டால்
கொலைக் களம் தப்பலாமே!

அவ்வாறு வர மறுத்தால்
அவனிடம் இருவரமோ கேள் நீ
பார்த்தனைத் தவிர மற்ற
பாண்டவர் கொல்லாதே என்று!

நாசமோ விளைய வல்ல
நாகாஸ்திர பாணம் தன்னை
ஒருமுறை மட்டு மேதான்
உபயோகி மகனே என்று

இவ்விரு வரங்கள் மட்டுமே
எப்படியும் பெற்று வந்தால்
பிள்ளைகள் ஐந்து பேரும்
பிழைப்பர் இதுஉறுதி என்றார்!

கண்ணனின் சொற்கள் கேட்டுக்
கலங்கிய அந்தக் குந்தி
கர்ணனையும் சேர்த்து மேதான்
காப்பாயே கண்ணா என்றாள்!

Koviloor Digital Library

கண்ணனோ நகைத்த வண்ணம்
கணக்காக அத்தை சொல்வார்
எவ்வாறு ஆகும் அத்தை
ஏதேனும் சோடை போகும்!

கர்ணனோ, காண்டீ பனோ
கட்டாயம் ஐவர் உண்டு
சென்றுவா அத்தை என்று
சீக்கிரம் அனுப்பினாரே!

Koviloor Digital Library

40. ஸ்ரீ கிருஷ்ணன் துணை தேடல்

பரந்தாமன் துயிலும் நேரம்
பார்க்கவந்த துரியோ தனனோ
கண்ணனின் தலை அருகே
கர்வமாய் அமர்ந்திருந்தான்!

பின்வந்த அர்ஜுனனோ
பெரும்பக்தி யுடனே சென்று
பரந்தாமன் கால்கள் பக்கம்
பயந்துமே அமர்ந்திருந்தான்!

கண்ணனோ வேண்டுமென்றே
கண்மூடித் துயின்ற வண்ணம்
பார்த்தனோ வந்தவுடன்
பார்த்திட்டார் கண்விழித்து!

கண்விழித்த கண்ண பிரான்
காண்டீபன் தன்னைநோக்கி
என்னவோ மைத்துனரே
இவ்வாறு என்று கேட்டார்!

பாம்புக் கொடியவனோ
பரந்தாமன் முன்னே வந்து
முன்னமே வந்து உள்ளேன்
முறை என்னைக் கேட்பதென்றான்!

Koviloor Digital Library

கண்ணனனோ நகைத்த வண்ணம்
கண்டது முதலில் பார்த்தன்
ஆனாலும் தவறொன்றில்லை
ஆவது என் சொல்லுமென்றார்!

கௌரவ பாண்டவர்கள்
களத்திலே மோதுகின்றார்
யுத்தமோ புரிவதற்கு
உதவியோ வேண்டுமென்றான்!

மாலனோ நகைத்த வண்ணம்
மைத்துனனே கவலை வேண்டாம்
தாங்கள் இருபே ருக்கும்
நானுதவி செய்வேன் என்றார்!

ஆயுதம் ஏந்தாத கண்ணன்
அப்பக்கம் படைகள் மொத்தம்
யார்வேண்டும் என்று சொல்லு
இளையோனே பார்த்தா என்றார்!

பார்த்தனோ உடனே சொல்வான்
படைகளோ எனக்கு வேண்டாம்
பரந்தாமா நீவிர் வந்து
பாண்டவர் காப்பீர் என்றான்!

ஏமாந்தான் பார்த்த னென்றும்
இதுநல்ல சமய மென்றும்
படைகளை மொத்தம் பெற்றுப்
பலவாறாய் மகிழ்ந்தான அரவோன்!

கண்ணனோ சொன்ன துபோல்
கடைசிவரை தேரை ஓட்டி
ஆயுதம் ஏந்தா நின்று
அர்ஜுனனைக் காத்து நின்றார்!

Koviloor Digital Library

41. குருக்ஷேத்ரம்

குருக்ஷேத்ர பூமி தன்னில்
கொடும்பகை யின்கா ரணமாய்
யுத்தமோ செய்வ தற்கே
மொத்த மாய்த்திரண் டிருந்தார்.

பீஷ்மரும் துரோணர் மற்றும்
பெரும்பெரும் மன்னர்களும்
எதிரணியில் நின்ற வண்ணம்
இதயமோ கலங்க லானார்!

கண்ணனோ தேரை ஓட்டிக்
காண்டீபன் அழைத்து வர
களத்தினைக் கண்ட உடன்
கலங்கியே போனான் பார்த்தன்!

அண்ணனும் தம்பி யுமாய்
ஆசானும் பாட்ட னுமாய்
முன்னமே கண்டு அவன்
மூர்ச்சையே அடைந்து விட்டான்!

கண்ணனே, கண்ணனே சொல்
கல்மனதா உன்மனமோ?
இவர்களைக் கொன்றா நானும்
ஏற்கணும் ராஜ்ய மென்றான்?

Koviloor Digital Library

பந்துக்கள் கொல்வ தனால்
பாருமே கிடைக்கு மென்றால்
பாருமே எனக்கு வேண்டாம்
போரினைத் தவிர்ப்பாய் என்றான்!

காண்டீபம் கீழே போட்டுக்
கண்ணனின் கால்கள் தொட்டு
வேண்டவே வேண்டா மிந்த
விபரீத யுத்த மென்றான்!

கண்ணனோ கவலை கொண்டு
காண்டீபா என்ன சொன்னாய்?
போருக்கு வந்த பின்னே
புலம்பலும் முறையோ என்றார்!

களத்திற்கு வந்த பின்னே
கண்ணீரை வடித்தி டலும்
சத்ரியா உனக் கழகோ
சாவதே மேல் என் றிட்டார்!

என்னென்ன சொன்ன போதும்
ஏற்காத பார்த்தன் கண்டு
இறைவனாம் கண்ணன் சொல்வான்
எடு வில்லை உடனே என்று!

உன்னுடை மித்திரன் நான்
உன்னையே நானறி வேன்
என்னையே அறிந்து கொள்வாய்
இதோவிஸ்வ ரூபம் என்றார்!

பாதத்தில் வீழ்ந்த அந்தப்
பார்த்தனைப் பார்த்துக் கண்ணன்
கீதையைச் சொல்லி யுமே
கேள் என்றார் கருணையோடு

Koviloor Digital Library

உன்னுடை கர்ம மதை
ஓயாது நீயும் செய்வாய்
புண்ணிய பாவ மெல்லாம்
போகட்டும் எனக்கே என்றார்!

கொல்வதும் கண்ணன் தானே
கொலை செய்வதும் கண்ணன் தானே
கொள்கையை விட்டி டாதே
குருக்ஷேத்ர மண்ணில் என்றார்!

பதினெட்டு அத்யா யங்கள்
பாங்காக எடுத் துரைத்து
பார்த்தனின் கல் மனதைப்
பனியாகக் கறைய வைத்தார்!

கடலும், நதிகளுமே
காண்கின்ற கோள்களுமே
நானேதான் பார்ப்பாய் என்று
நண்பனுக்குச் சொல்லி நின்றார்!

மண்ணிலே பிறந்த உயிர்
மாய்வது வழக்க மேதான்
எண்ணாதே இவைகள் பற்றி
எடு காண்டீபம்என்று சொன்னார்!

யுத்தமே இலை எனினும்
உடல் தோய்ந்தால்ப் போயே போகும்
மறுபடியும் கர்மம் போல
மண்ணிலே பிறக்கு மென்றார்!

சட்டையை மாற்று வண்ணம்
சடலத்தை மாற்றி விட்டுச்
செய்கின்ற வினைக்கு ஏற்பச்
சிறப்பாகப் பிறக்கு மென்றார்!

Koviloor Digital Library

நடந்தவை நல்ல தென
நாடெல்லாம் போற்றி டினும்
அல்லது அவைகள் என்று
அவனியே தூற்றி டினும்
எல்லாமே நானே ஏற்பேன்
எடுகாண் டீபம் என்று சொன்னார்!

எனக்கு மேல்இவ் உலகில்
ஏதுமே பெரிய தல்ல
எல்லா மேநானே தானே
இதோபாரு என்னை என்றார்.

நீரிலே ரசமும் நானே
நிலவிலே ஒளியும் நானே
வேதத்தில் பிரணவமும் நானே
வேந்தனே அறிவாய் என்றார்!

பூமியில் மணமும் நானே
பெரும்தீயுள் அனலும் நானே
உயிரினங்களில் ஒளிந்து உள்ள
உயிரெல்லாம் நானே என்றார்!

என் நிலை வந்த போதும்
என்னையே நம்பிக் கொண்டு
யுத்தமே செய்வா யானால்
உயர்வுமே வருமே என்றார்!

மரணமோ நேரும் போதும்
மனதையே ஒருமை யாக்கி
கண்ணனை வேண்டி நின்றால்
என்னடி சேர்வார் என்றார்!

Koviloor Digital Library

தந்தையும் தாயும்
தனயனும் நானே!
தன்நிக ரில்லா
வேதமும் நானே!
வெயிலும் நானே!
மழையும் நானே
மரணமும் நானே!
ஜெனனமும் நானே!

கடலும் நானே!
கதிரும் நானே!
காணும் அனைத்தும்
நானே! நானே!
மண்ணும் நானே!
மரமும் நானே!
மலர்செடி கொடிகள்
அனைத்தும் நானே!
பகைவனும் நானே!
நண்பனும் நானே!
பாரில் அனைத்தும்
நானே! நானே!

ஆகவே தனஞ் செயாநீ
அனைத்தையும் விட்டு விட்டு
என்னையே எண்ணிக் கொண்டு
எடுகாண்டீபம் என்று சொன்னார்!

என்னைநீ பொய்ய னாக்கி
ஏகவும் நினைத்து விட்டால்
நம்முடை பந்தம் எல்லாம்
நலிந்துமே போக! என்றார்!

Koviloor Digital Library

இதற்குமேல் மாட்டேனென்று
என்சொல்லைக் கேளாவிட்டால்
நல்லது அல உனக்கு
நசிந்துமே போவாய் என்றார்.

கண்ணனின் சொற்கள் கேட்ட
காண்டீபன் மனம் வருந்தி
ஐயனே! இனியும் வேண்டாம்!
ஆட்கொள்ளும் எம்மைஎன்றான்!

பகவானின் விஸ்வ ரூபம்
பார்த்தானோ பார்த்து விட்டுக்
கண்ணனோ கண்ணன் அல்லன்
கடவுளே எனப் புரிந்து
மனதினைக் குழப்பி நின்ற
மாயைகள் அனைத்தும் தீர
மாலவன் சொற்கள் மட்டும்
மனதிலே நிற்க லாகி
காண்டீபம் மீண்டும் ஏந்தி
களத்தினை நோக்கி நின்றான்!

பார்த்தனின் மனமோ மாறப்
பரந்தாமன் சொன்ன தெல்லாம்
''கீதை''எனப் பெயரோ சூட்டிக்
கிருஷ்ணரோ உலகிற் கீந்தார்!

Koviloor Digital Library

42. கண்ணன் கோபம்

தன்னுடைய தோல்வி காணாத்
தனயன் திருதராஷ்டிரன் வந்து
பாட்டனார் பீஷ்மர் நோக்கிப்
பலவாறாய்க் குறைபட் டிட்டான்

பீஷ்மரோ மனம் உடைந்து
பேரன் துரியோதனன் சொல்வார்
என்னுடைய பலத்தை எல்லாம்
இப்போதே பார்ப்பாய் என்றே!

நினைக்கின்ற விதத்தைப் போல
நெறிஒன்றும் தவறமாட்டேன்
மரணமோ நெருங்கும் போது
மரம்கூடதெரியும் பொன்னாய்!

உனக்கு நான் சொன்ன வையோ
ஓர்போதும் பொய்யாகாது
சிகண்டியோ, பாண்ட வரோ,
செத்தாலும் கொல்லேன் நானே!

என்றுமே பிஷ்மர் சொல்லி
எப்போதும் இல்லா வண்ணம்
கடும்போரோ செய்து நிற்கக்
கண்ணனோ கலங்கிப் போனார்!

Koviloor Digital Library

பாண்டவர் படைகள் எல்லாம்
பசுக்கள் போல்வெகுண்டு ஓட
பார்த்தனோ துரோணர் முன்பு
பார்த்திரா போரில் நின்றான்

அப்போது கண்ணன் பார்த்து
அப்பா காண்டீபா நீயும்
பதின்மூன்று ஆண்டு காத்த
படலமோ வந்த தென்றார்!

சத்ரிய தர்மம் தன்னைத்
தயங்காது நீயும் எய்து
பீஷ்மரைக் கொல் இலையேல்
பிழைக்கார் நம்படைகள் என்றார்!

கண்ணனின் சொற்கள் கேட்ட
காண்டீபன் தலை குனிந்து
பீஷ்மரைக் கொல்வ திலும்
பெரும்சுகம் வனவாசம் என்றார்

இருந்தாலும் உன்சொல் கேட்பேன்
ஏகுவாய் பீஷ்மர் நோக்கி
அன்னவர் கொன்று மேதான்
அவப்பெயர் சுமப்பேன் என்றான்!

என்றுமே பார்த்தன் சொல்லி
இருமனத்தாய்ப் பீஷ்மர் செல்ல
பீஷ்மரோ பாணம் செய்து
பெரும்பகல்க் கதிராய் நின்றார்!

Koviloor Digital Library

தேர், கொடி, குதிரை, ரதம்
தெரியாது பீஷ்மர் பாணம்
மூடியே நின்ற போதும்
முன்னேறிச் சென்றார் கண்ணன்

பாட்டனார் பாணம் தன்னால்ப்
பார்த்தனைப் புண் படுத்தக்
கண்ணனையும் சேர்த்து மேதான்
கடுமையாய்த் தாக்கி நின்றார்!

கண்ணனோ வெகுண் டெழுந்து
காண்டீபன் பார்த்துச் சொல்வார்
என்னநீ போர் செய்கின்றாய்
இதுதானா போர் என்றிட்டார்?

பந்தத்தை எண்ணி நீயும்
பாட்டனை விட்டு விட்டால்
பாரதம் முடிந்து என்று
பரந்தாமன் செல்வ தென்றார்?

என்றுமே கோபம் கொண்டு
இறங்கியும் தேரின் நின்று
சக்கரம் கையிலேந்தி
சாரதி நடக்க லானார்!

பீஷ்மரை நானே கொல்வேன்
பெரும் யுத்தம் முடிப்பேன் இன்றே
பார்த்தா நீ பார்த்துக் கொண்டு
பந்தத்தைக் காப்பாய் என்றார்!

Koviloor Digital Library

கண்ணனின் கோபம் கண்டு
கடும்யுத்தம் தன்னில் பீஷ்மர்
அய்யனே வந்து கொல்லும்
அளவிலா மகிழ்ச்சி என்றார்!

கேசவா நின்கை யாலே
கிழவன் நான் இறந்து போதல்
எத்துணை புண்ணியமோ
இதையும் நான் அறிவேன் என்றார்!

ஆயுதம் ஏந்தாக் கண்ணன்
அவ்விரதம் தோற்க வைத்தேன்
அவ்வெற்றி ஒன்றே போதும்
அய்யனே ஆட்கொள்வாய் என்றார்!

பார்த்தனோ ஓடிச் சென்று
பரந்தாமன் பிடித் திழுத்து
என்னமோ மனக் குழப்பம்
இருந்திட்டேன் பொறுப்பாய் என்றான்.

ஆயுதம் எந்தாக் கண்ணன்
அவ்வரம் காத்து மேதான்
புண்ணியன் உந்தன் சொற்கள்
பொய்யாக வேண்டா மென்றான்!

Koviloor Digital Library

கண்ணனின் செயல்களாலே
காண்டீபன் கலக்கம் நீக்கி
புண்ணியன் பாட்டன் பீஷ்மர்
போரினில் முடித்திட்டானே!

தரையிலே வீழ்ந்த பீஷ்மர்
தலைதொங்கக் கண்டு மேதான்
தனஞ்செயா அம்பு எய்து
தாங்குவாய் தலையை என்றார்.

அர்ஜுனன் பாணம் போட்டு
அவர்தலை தாங்கக் கண்டு
பார்த்தன்மேல் அன்பு கொண்டு
வாழ்த்தினார் பெரியோர் பீஷ்மர்

தாகமோ எடுத்த போது
தண்ணீரோ வேண்டிநிற்க
காண்டீபன் பாணம் போட்டுக்
கங்கையை கொணர்ந்தான் அங்கு!

அர்ஜுனன் செயலைக் கண்டு
ஆனந்தப் பட்ட பீஷ்மர்
யாராலே முடியும் இந்த
அருஞ்செயல் எனப் புகழ்ந்தார்!

Koviloor Digital Library

43. அர்ஜுனன் தேற்றல்

பீஷ்மரோ வீழ்ந்த பின்னே
பெரும் கவலை அடைந்த மன்னன்
ஆச்சார்ய துரோணருக்கே
அபிஷேகம் செய்து வைத்தான்!

பீஷ்மரின் பாசத்தாலே
பிழைத்திட்டார் பாண்டவர்கள்
ஐயாஉம் தலைமை தன்னில்
அழிவது திண்ணம் என்றான்!

ஆச்சார்ய துரோணர் தன்னை
அதிகமாய்ப் புகழ்ந்துமேதான்
தர்மரை மட்டும் உயிராய்த்
தாருமே பிடித்து என்றான்!

துரோணரோ கேட்டுவிட்டு
துயரோமோ வேண்டாம் மன்னா
பத்ம வியூகம் அமைத்துமேதான்
பக்குவமாய்ப் பிடிப்பேன் என்றார்!

இவ்வியூகம் தனை அறிந்தோர்
யாருமிலை பார்த்தன் நீங்க
அவனையே பிரித்துச் சென்றால்
அதிவிரைவில் பிடிப்பேன் என்றார்!

Koviloor Digital Library

பார்த்தனோ சூழ்ச்சியாலே
பாண்டவர் நீங்கிச் செல்ல,
பாலகன் அபிமன்யூவோ
பத்மத்தில் சிக்கிக் கொண்டான்!

அதிரதர் அனைவர் சேர்ந்தே
அவனையே வதைக்க லானர்
கண்ணனோ தெறிந்து கொண்டு
காண்டீபன் அழைத்துச் சென்றார்!

புத்திரன் சோகம் தன்னால்
போவானே மதி மயங்கி
என்றுமே மனதில் எண்ணி
இதற்குமே வழியோ செய்தார்.

பார்த்தனைத் தேற்ற வேண்டி
பரந்தாமன் பலவும் எண்ணி
தேவேந்திரன் அழைத்துமே தான்
தீபுக வழியும் செய்தார்!

பிராமணன் வேடம் கொண்டு
பார்த்தனின் கண்கள் முன்னே
தீபுகும் பெரியோன் தன்னை
தடுத்துமே நிறுத்து மென்றார்!

பார்த்தனோ சென்று அந்தப்
பிராமணப் பெரியோன் கண்டு
தடுத்துமே நிறுத்தி விட்டுத்
தகுமோ இச்செயல்கள் என்றார்!

அந்தணனோ மன முடைந்தூ
அர்ஜுனன் சொல்ல நிற்பான்
ஐயாஎன் ஒரு மகனே
அமரராய்ச் சென்றான் என்று!

Koviloor Digital Library

இன்னும் நான்இவ் உலகில்
இருப்பது ஏனோ ஐயா
ஐயனே வழிவிடும் நீர்
அவனுடன் செல்ல என்றார்!

அர்ஜுனன் அவரைப் பார்த்து
ஆறுதல் எல்லாம் சொல்லி
எல்லாமே விதியின் வேலை
இதை மாற்ற யாம்யார் என்றான்!

உபதேசம் பலவும் செய்து
ஒருவாராய் மனதை மாற்றி
தீயுனுள் இறங்கா வண்ணம்
திருக்கண்ணன் அருகே சேர்ந்தார்!

பெரியவரை விட்டுக் கண்ணன்
பார்த்தனை அழைத்துக் கொண்டு
போகின்ற விழியில் அந்தப்
பொல்லாத செய்தி சொன்னார்!

அப்பனே பார்த்தா நீயும்
அதைரியப் படவும் வேண்டாம்
பாலனாம் அபிமன் யுவும்
பட்டிட்டான் பலபேரால் என்றார்

அபிமன்யு என்ற போதே
அர்ஜுனன் நினை விழந்து
புத்திர சோகம் தன்னால்
பித்தனாய்த் துடிக்க லானான்!

என்னுடை குலக் கொடியே
என்னானாய் என்று சொல்லி
கண்ணனின் கரம் பிடித்து
கதறியே துடிக்க லானான்!

Koviloor Digital Library

என்செய்வேன் கண்ணா நீயும்
எல்லாமே தெரிந்திருந்தும்
என்பிள்ளை காக்கவில்லை
இவ்வுயிரோ எதற்கென்றிட்டான்!

பிள்ளையோ போன பின்னே
பெறும் வெற்றி எனக்கேன் என்று
கண்ணனோ தேற்றி னாலும்
காதிலே கேட்கா நின்றான்!

முன்னவன் போன்றவனும்
மூழ்கவே நெருப்பு மூட்டி
கண்ணனே மன்னி யென்று
கனலிலே மூழ்க நின்றான்

கண்ணனின் அழைப்பிற்காகக்
காத்துமே நின்ற இந்திரன்
அந்தணர் வேடத் தோடு
அவரிடம் வந்து சேர்ந்தார்

கண்ணனோ கதையைச் சொல்லக்
காதிலே கேட்டுக் கொண்டு
அர்ஜுன னிடமே சென்று
ஆகுவாய் மன்னா என்றார்!

அர்ஜுனா என்ன தர்மம்
அந்தணர் என்றால் தாழ்வா
மன்னனே தவறலாமா
மற்றவர்க் குரைத்த தென்றான்!

என்பிள்ளை காண நானும்
இறங்கிய நெருப் பணைத்து
உன்பிள்ளை என்ற போது
உட்புகல் முறையோ என்றான்!

Koviloor Digital Library

பரந்தாமன் மெல்ல வந்து
பார்த்தா இதுநியா யமல்ல
அந்தணர்க் குரைத்த நியதி
அடுக்குமே உனக்கும் என்றார்!

உயிருக்கு அழிவு இல்லை
உடலுக்குத் தானே உண்டு
கீதையைக் கேட்ட பின்னும்
மாயையில் மூழ்காதே என்றார்.

அபிமன்யு கொன்ற அந்த
அதர்மனைக் கொல்வதன்றி
சத்ரியன் உந்தன் தர்மம்
சாவதுவா என்று சொன்னார்?

பார்த்தனைத் தழுவிக் கொண்டு
பலவித நியதி சொல்லி
கீதையின் பாதை தன்னில்க்
கிருஷ்ணரே அழைத்துச் சென்றார்!

Koviloor Digital Library

44. ஜெயத்ரதன் வதம்

தன்மகன் அபிமன் யுவை
தர்மமோ இல்லா வண்ணம்
கொன்றவனைக் கொல்வேன் நாளை
கோவிந்தா என்றான் பார்த்தன்!

கதிரவன் சாயும் முன்பே
கண்டுமே ஜெயத்ரதன் தன்னைக்
கட்டாயம் கொல்வேன் அன்றில்
காண்டீபம் இல்லை என்றான்!

பார்த்தனின் சபதம் கேட்டுப்
பயந்துமே போன கண்ணன்
எல்லாமே நடக்கு மென்றார்
ஏதேதோ திட்டம் தீட்டி!

அரவனோ கர்ணன் நோக்கி
அப்பனே இன்று மட்டும்
ஜெயத்ரதனைக் காத்து விட்டால்
ஜெயித்துமே விட்டோம் என்றான்!

பார்த்தனோ மாண்டு போவன்
பாரதம் முடிந்தே போகும்
பார்மொத் தம் நமக்கு மேதான்
பகையின்றிக் கிடைக்கு மென்றான்!

Koviloor Digital Library

கர்ணனோ கேட்டு விட்டுக்
கண்இனி நண்பன் சொல்வான்
பீமனால் அடியும் பட்டுப்
பெருந்துயர் அடைந்துள் ளேன்நான்
இருந்தாலும் முடியும் வரைக்கும்
எதிர்த்துமே தடுப்பேன் என்றான்!

கண்ணனின் பாஞ்ச ஜன்யம்
கடுமையாய் ஒலிக்கக் கேட்டு
தாருகன் தேரில் ஏறிச்
சாத்யகி துணையாய் வந்தான்!

யுத்தத்தைப் பார்த்து விட்டு
சஞ்சயன், மன்னன் சொல்வான்
கிருஷ்ணனும், தனஞ்செயனும்
கீர்த்தியுள் சாத்ய கியும்
உலகத்தில் சிறந்த வில்லர்
ஒருவரும் எஞ்சார் என்றே!

நேரமோ நெருங்கும் போது
நீலவண்ணக் கண்ணன் பார்த்து
கதிரவன் மறைத்து நிற்கக்
கௌரவர் மகிழ்ந்தே போனார்!

சூரியன் மறைந்த தாலே
சொன்னது போல்ச் சாவானென்று
சுற்றமோ மகிழ்ந்து நிற்கச்
சூரியன் பார்த்தான் ஜெயத்ரன்!

கருமேகம் விலகச் செய்து
கதிரவன் காணச் செய்து
அதோ பாராய் ஜெயத்ரதன்
அடியென்றார் பார்த்தன் நோக்கி!

Koviloor Digital Library

அர்ஜுனன் கோபம் தீர
அறுத்திட்ட அவன் தலையோ
ஆகாயம் மார்க்கம் சென்று
அவன் தந்தை கையில் போட்டான்!

தன்மகன் தலையோ எவனும்
தரைதன்னில் வீழச் செய்தால்
அன்னவன் தலை வெடிக்க
அரனிடம் வரத்தைப் பெற்றான்!

தன்கையில் விழுந்த அந்தத்
தலைதன்னை யாரோ என்று
தரையிலே போட்ட தந்தை
தலைநொறுங்க இறந்தாராமே!

Koviloor Digital Library

45. துரோணாச்சார்யார் முடிவு

துரோணரின் பாணம் முன்பு
துவண்டுமே படைகள் போக
கண்ணனோ கண்டு விட்டுக்
கலங்கியே போனார் கொஞ்சம்!

அன்னவர் யுத்தம் செய்தால்
அடையோமே வெற்றி என்று
தந்திரம் பலவும் செய்து
தான் கொல்லத் திட்டமிட்டார்!

தர்மரை அழைத்து மேதான்
தன்எண்ணம் பற்றிச் சொல்ல
ஐஐயோ வேண்டாம் கண்ணா
ஆகாது பொய்உரைக்க என்றார்!

சொன்னது எல்லாம் செய்தேன்
சூதனா இதுமட்டும் வேண்டாம்
வேறேதும் வழியிருந்தால்
கூறுவாய் கேட்பேன் என்றார்!

கண்ணனோ தர்மர் நோக்கிக்
கட்டாயம் சொல்ல வேண்டும்
இல்லையேல் நம்மில் யாரும்
எஞ்சாரே என்று சொன்னார்!

Koviloor Digital Library

அஸ்வத் தாமனோ இறந்தா னென்றும்
அதனிடை யானை என்றும்
சொன்னாலே போதும் மன்னா
சூதினை வெல்வேன் என்றார்!

துரோணரோ தன்மக னாம்
தூயவன் அஸ்வத்தாமன்
இறந்ததாய்க் கேள்விப்பட்டு
இது உண்மையா தர்மா என்றார்!

கண்ணனோ சொன்னதுபோல்
காதிர்க்குக் கேட்கு வண்ணம்
அஸ்வத் தாமனோ இறந்து போனான்
அது யானை என்றார் மனதே!

அது யானை என்ற போதே
ஆகாயம் அதிரும் வண்ணம்
கண்ணனோ பாஞ்ச சன்யம் ஊதி
காதெல்லாம் கேட்காச் செய்தார்!

தன்மகன் அஸ்வத் தாமன்
தானிறந்தான் போரில் என்று
தர்மரே சொல்லக் கேட்டு
தன்நிலை குலைந்தே போனார்!

Koviloor Digital Library

வில்லையும் கீழே போட்டு
வீரமும் அங்கே போட்டுச்
சொல்லிய சொல்லும் போட்டுச்
சோகத்தில் மூழ்கிப் போனார்!

வீரமும், வித்தை கற்ற
விவேகியே இறந்த போது
தான் மட்டும் இனி யேனென்று
தலைசுற்ற மயங்கிவிட்டார்!

கண்ணனோ சமயம் என்று
காட்டவே திட்டத் துய்மன்
முன்பகை எண்ணி எண்ணி
முடிந்தவரை கொன்றே போட்டான்!

Koviloor Digital Library

46. கர்ணனுக்கு கண்ணன் காட்சியளித்தல்

அங்கத தேச இராஜன்
அதி வீரக் கர்ணன் தன்னை
அர்ஜுனனோ எதிர்த்து நின்று
ஆவேசப் போரோ செய்தான்!

கர்ணனோ அர்ஜுனனோ
கண்டிடுவோம் போரில் என்று
கண்களில் அனல் பறக்க
கடும்யுத்தம் செய்திட் டாரே!

ஒருவரை எஞ்சி மற்றோர்
உயர்வான பாணம் போட்டு
பரம்பரைப் பகையைத் தீர்க்கப்
பலவாராய் முயற்சி செய்தார்.

சாரதி யாகி நின்ற
சல்லியன் ராஜன் பார்த்துக்
கர்ணனே நாக பாணம்போட்டு
காண்டீபன் கொல்என் றிட்டார்!

நல்லது நல்லதையா
ஞாபகப் படுத்தி விட்டீர்
இப்பொழுதே போட்டுமேதான்
இவன் கதை முடிப்பேன் என்றான்!

Koviloor Digital Library

கர்ணனோ நாணை ஏற்றிக்
கழுத்துக்குக் குறியோ வைத்து
விஜயனைக் கொல்ல எண்ணி
வில்லினை வளைத்து நின்றான்!

தனஞ்செயன் மாமனான
சல்லிய ராஜன் சொல்வான்
மார்புக்குக் குறியை வைத்து
மாளவும் செய்வாய் என்றே!

கர்ணனோ எதிர்த்து சொல்வான்
காண்டீபன் பெரிய வீரன்
தொல்லைகள் கொடுக்கா வண்ணம்
கொல்வேன் நான் பார்ப்பீர் என்றான்!

கர்ணனோ தொடுத்த பாணம்
காண்டீபன் நெருங்கும் போது
கண்ணனோ தேரைக் கொஞ்சம்
காலாலே அழுத்தி விட்டார்!

தலைக்கு நேர்வந்த பாணம்
தலைப்பாகை கொண்டு செல்ல
சல்லியனோ நகைத்த வண்ணம்
சரியாக எய்தாய் என்றான்!

மீண்டுமே நாக பாணம்
வேண்டியே தொடுக்கும் போது
தாய்க்குமே கொடுத்த வரம்
தடுத்தது அவன் மனதை!

பார்த்தனோ உயிர் பிழைத்து
பரந்தாமனை வணங்கி நின்று
ஐயனே மீண்டும் எய்தால்
அடியேன் நானென்ன செய்வேன்?

Koviloor Digital Library

என்றுமே காண்டீபன் கேட்க
எல்லாமே தெரிந்த கண்ணன்
ஒன்றுமே கவலை இல்லை
ஒருமுறை மேல் எய்யான் என்றார்!

அந்நேரம் கர்ணன் தேரோ
அழுந்திடவே பூமி தன்னில
சாரதி யிடமே சொல்வான்
சரிசெய்து ஓட்டு என்றே!

சாரதியாகி நின்றஅச்
சல்லியன் இராஜன் சொல்வான்
ஓடுவது குதிரை யானால்
ஓட்டுவது என்னால் ஆகும்.

சல்லியன் மேலும் சொல்வான்
தலைவிதி எனக்கு மில்லை
சொன்னதை மதியா உனக்கு
தேரோட்டத் தேவை இல்லை
என்றுமே சொல்லி விட்டு
இறங்கினான் தேரை விட்டே!

கர்ணனோ தேர் இறங்கிக்
களத்தினில் தனுரைப் போட்டு
தள்ளவே பார்த்த மன்னன்
தலைவிதி தள்ளு என்றான்!

கண்ணனோ பார்த்து விட்டுக்
காண்டீபா நல்ல நேரம்
போர்முடிய வேண்டு மானால்
போட்டிடு அம்பு என்றார்!

Koviloor Digital Library

பார்த்தனோ பதில் பேசாமல்
பலஅம்பு எய்து நிற்க
சக்கரம் மீதே கர்ணன்
சாய்ந் திட்டான் நிலை குலைந்தே!

பார்த்தனோ வியந்து போயே
பரந்தாம னிடமே கேட்பான்
எத்துணை அம்பெய்தாலும்
ஏனிலை மரண மென்று!

கண்ணனோ சொல்வானந்தக்
காண்டீபன் பார்த்தன் பார்த்து
அவன்செய்த தர்மங்கள்தான்
அவன்உயிர் காப்ப தென்று!

வேதனை மிகுந்த அந்த
வீரனைப் பார்ப்பதற்கே
கடவுளே தேரை விட்டுக்
கால்நடை யாகச் சென்றார்!

அந்தணன் வேடம் கொண்டு
அவனருகே சென்ற கண்ணன்
ஏதேனும் தர்மம் செய்வாய்
எளியோன் நான் வந்தேன் என்றார்!

கர்ணனோ நகைத்துவிட்டுக்
கடைசியில் வந்துள்ளீர்கள்
என்னிடம் என்ன உள்ள
ஈயநான் உமக்கு என்றார்?

தம்முடை புண்ணியங்கள்
தந்தாலே போதும் மன்னா
இல்லைஎன்று சொல்லாமல் நீ
எனக்கருள வேண்டும் என்றார்!

Koviloor Digital Library

ஐயையோ பெரும்பேறு பெற்றேன்
அதை நானோ மறந்தே போனேன்
இப்போதே தருவேன் ஐயா
எடுத்துக் கொண்டருள்வீர் என்றான்!

சாகின்ற போதும் கூடத்
"தந்திட்டான்" கர்ணன் என்ற
சரித்திரம் சொல்ல வைத்த
சான்றோனே யார்நீ என்றான்!

கர்ணன் சொல் கேட்ட கண்ணன்
கண்ணீரை உகுத்த வண்ணம்
புண்ணியனே என்னைப் பாரும்
புரிந்திடும் எல்லாம் என்றார்!

கண்ணனின் விஸ்வ ரூபம்
கண்டிட்ட கர்ணன் சொல்வான்
ஐயனே; திருமாலே - கண்ணா
அடியேனை ஆட்கொள் என்றே!

கண்ணனோ வாழ்த்திவிட்டுக்
கடிந்துமே தேரில் ஏறி
அர்ஜுனா தொடு அம்பென்று
அவன் உயிர் பிரித்திட்டாரே!

கண்ணனோ இறந்த சேதி
கானக நெருப்பாய் மாற
குந்தியோ காதில்க் கேட்டு
வந்துமே கதறி நின்றாள்.

கர்ணனின் ஆசைபோலக்
கதறினாள் குந்திதேவி
மடியினில் சுமத்திக் கொண்டு
மகனே! என் மகனே என்று!

Koviloor Digital Library

குந்தியின் அழுகை கேட்டு
வந்துமே பார்த்தன் பார்த்து
அன்னையைக் கேட்டறிந்து
அழுதுமே புலம்பி நின்றான்.

கண்ணனை நோக்கி அந்தக்
காண்டீபன் பேசலானாள்
என்னுடைய அண்ணனை நீ
ஏன் கொலச் செய்தாய் என்று!

கண்ணனோ விளக்கம் சொல்லிக்
காண்டீபன் உன்னால் இல்லை
முன்னமே ஐந்துபேர்கள்
முயன்றுமே கொன்றிட்டார்கள்!

பின்னவன் நீயும் வந்து
கொன்றவன் கொன்றாய்அன்றி
உன்னாலே கர்ணன் கொல்லல்
ஓர்போதும் ஆகாதென்றான்!

கவச குண்டலம் கவர்ந்து
கருவண்டாய் நான்பறந்து
குந்தியோ வரத்தைப் பெற்றுக்
கொன்றது போக மீண்டும்
தேரினை அழுத்தி நானும்
தேரோட்டாச் சல்லியனும்
பலவாராய்க் கொன்றுபின்னே
பார்த்தாநீ கொன்றாய் என்றார்!

Koviloor Digital Library

47. கடைசி யுத்தம்

பீஷ்மரும் துரோணரும்
பெரும் வில்லன் கர்ணனுமே
போரிலே மாண்ட பின்னர்
புறப்பட்டான் துரியோ தனனே!

பீமனுடன் கெதை எடுத்து
பெருயுத்தம் செய்த வண்ணம்
ஒருவருக் கொருவர் போரோ
உயர்வாகச் செய்து நின்றார்!

பீமனோ கோபத் தீயில்
பெருமளவு அடித்திட் டாலும்
ஆகவில்லை அவனைக் கொல்ல
அந்நிலையில் பீமன் தன்னால்!

பரந்தாமன் பார்த்து விட்டு
பலவாராய் எண்ணி எண்ணி
வேறுவழி இலாது கண்டு
வெந்துமனம் முடிவெடுத்தார்!

பெருமானோ சைகை செய்து
பீமனைத் திரும்ப வைத்து
தொடை தன்னைத் தட்டிக் காட்ட
அடித்திட்டான் ஒரே அடியாய்!

Koviloor Digital Library

தொடையினில் அடித்த தாலே
துவண்டுமே போன ராஜன்
சூழ்ச்சியைப் பார்த்து விட்டுச்
சூதனைத் திட்டலானான்!

கண்ணனே! கண்ணனே!
கபடதாரிக் கண்ணனே நீ
சூழ்ச்சிகள் செய்து அன்றோ
சுற்றமெலாம் கொன்றாய் என்றான்!

பீஷ்மரும் துரோணர் மற்றும்
பிரிய நண்பன் கர்ணனையும்
கொன்ற விதம் உலகறியும்
கொலைகாரக் கண்ணா என்றான்!

பீமனும் நானுமே இப்
பேருத்தம் செய்யும்போது
தொடையினில் அடிக்கவைத்தாய்
துஷ்டனே! இதுபோரா? என்றான்!

கண்ணனோ நகைத்து விட்டுக்
கபடனாய்த் தெரிகின்றேனா?
கண்கெட்டுப் போன பின்னே
கதிரவனைப் பார்க்கின்றாயா?

அரக்கு மாளிகை அமைத்து
ஐவரையும் நெருப்பு வைத்து
அன்றுநீ செய்த தெல்லாம்
அநியாய மாய்இல்லையா?

சகுனியின் சொல்லைக் கேட்டுச்
சண்டாளச் சூது ஆடி
பாண்டவர் சொத்து எல்லாம்
பறித்தது நியாயம் தானா?

Koviloor Digital Library

பகடையில் மோசம் செய்து
பலமுறை வென்ற போது
மாமனே! மாமனே என
மாயையில் மகிழ லையா?

ஒவ்வொன்றாய்ச் சூதில்வைத்து
உறவெல்லாம் வென்ற பின்னும்
துருபதன் மகளைக் கூட
துஷ்டனே விடவும் இல்லை!

நானே உனைக் கொன்றுஅன்று
நங்கை தனைமீட்டிருப்பேன்
காலம் வரட்டு மெனக்
கட்ட மட்டும் துயில்கொடுத்தேன்!

அப்பொழுதும் அறிவில்லை
அவளைப் புரிந்து கொள்ள
இப்பொழுது அழுவதினால்
என்ன பயன் கண்டிடுவாய்!

தூதனாய் வந்த அன்று
சொன்னேன் நான்பல உனக்கு
போரிலே வந்து நீயும்
பாரென்று என்னைச் சொன்னாய்!

ஊசிமுனை இடமே கூட
ஓர்போதும் தாரேன் என்றாய்
என்னநீ எடுத்துக் கொண்டு
இப்பொழுது செல்லு கின்றாய்!

பாலன் அபிமன்யுவைப்
பலபேர்கள் சேர்ந்து கொன்ற
பாதகச் செயல்களெல்லாம்
பழிஇலாச் செயல்கள்தானா?

Koviloor Digital Library

சகுனியோ இல்லை இன்று
தம்பிகள் நூறு மில்லை
சான்றோர்கள் யாரு மில்லை
சாகின்றாய்த் தனிமை யாக!

உன்மேலே பகை எனக்கு
உடன்பிறந்த ஒன்றா? நீயும்
நல்லதைச் சொன்னபோது
நகைத்துமே அனுப்பிவிட்டாய்!

தம்பியை அழைத்து நீயும்
தலைமுடி பிடித் திழுத்து
சபைக்குமே கொண்டுவந்த
சண்டாளன் நீயுமில்லை?

சண்டாளன் உந்தன் தம்பி
சபைக்குமே கொண்டு வந்து
அன்னவள் துயில் உறிந்த
அரக்கர்கள் நீங்களில்லை?

கண்ணனோ இல்லை எனில்
காதகர்காள் அவள் நிலமை
என்னவாய் முடிந்திருக்கும்
இரும்பு நெஞ்சா உங்களுக்கு?

தாயில்லை தங்கை யில்லை
தன்குழந்தை என்றில்லை
பேயாய்ப் பிசாசாய்நீர்
பிறந்தீர் அஸ்த்தினா புரத்தே!

பாம்பிற்குப் பாலூட்டி
பகையை வளர்ப்பதைப்போல்
கர்ணனை வளர்த்து வந்தாய்
காண்டீபன் கொல்வ தற்கே!

Koviloor Digital Library

துருவாசர் முனிவர் ஏவி
துயர் கொடுக்க நினைத்தாய் நீயும்
கண்ணனோ கண்டு கொண்டு
காத்திட்டான் பாண்டவரை!

ஒரு சோறு வாயில்ப் போட
உலகெலாம் பசியோ நீங்க
வந்தஅவ் முனிவ ரெல்லாம்
வழியில்லை உண்ண என்றார்.

பாண்டவர் அண்ணன் என்று
பார்த்துமே குந்தி சொல்ல
தெரிந்துமே உயிரை விட்டான்
தீயோனே உனக்காய்க் கர்ணன்

ஆட்டிடை இடையன் நீயோ
அரசியல் எதற்கு என்று
கண்ணனைப் பார்த்துக் கேட்டாய்
கண்டாயா அதன் பலனை?

மண்மேலே ஆசை கொண்டு
மரணத்தைத் தழுவும் நீயோ
பீஷ்மரும் துரோணரையும்
பேசியே கொன்றாய் அன்றோ!

கோகுலம் வாழ்ந்திட்டாலும்
கொடியோனே உந்தன்சுற்றம்
தேவகி வயிற்றுப் பிள்ளை
தெரியாதா உனக்கு என்னை?

ஆட்டிடை வளர்ந்த தாலே
அரசியல் எதற்கு என்று
சத்ரியன் என்னைக் கேட்டாய்
சண்டாளா பார்த்தாயா யுத்தம்?

Koviloor Digital Library

இவை எல்லாம் நியாயம் என்றால்
இதுவுமே நியாயம் தானே
முள்ளினை முள்ளால் தானே
முடிந்திடும் எடுப்பதற்கு!

நீ விதைத்த வினைகள் தானே
நிற்கதியாய் நிற்கு கின்றாய்
பாவியே உன்னால்த் தானே
பாரதமோ நடந்த தென்றார்!

உன்உதிரம் கூந்தல் தேய்க்க
உத்தமியோ வந்து விட்டாள்
தன்னுடைய சபதம் தீர்ப்பாள்
சண்டாளா காத்திரென்று

பாண்டவர் அழைத்த வண்ணம்
பாரதம் முடிந்த தென்று
தேரினில் ஏற்றிக் கொண்டு
திருக்கண்ணன் சென்றிட்டாரே!

Koviloor Digital Library

48. பாண்டவர் வம்சம் காத்தல்

ஆச்சார்ய மைந்த னான
அஸ்வத்தாமனோ கேள்விப் பட்டு
துரியோதனன் அருகே சென்று
துடித்திட்டான் மன்னன் எண்ணி!

யுத்தத்தில் தர்ம மின்றி
உன்னையே கொன்றவர்கள்
ஒழிப்பேன் நான் எவ் விதமோ
உடனேயே என்று சொன்னான்!

தந்தையைக் கொன்ற வண்ணம்
தர்மமே இலா நிலையில்
உம்மையும் கொன்று போட்டார்
ஓர்போதும் பொறுக்கேன் என்றான்!

ஆச்சார்ய மைந்தன் சொற்கள்
அமிர்தமாய்ச் செவியில்ப் பாய
அங்கேயே பட்டம் சூட்டி
அனுப்பியே மகிழ்ந்தான் அரவோன்!

பீஷ்மரும் துரோணர் மற்றும்
பெரும்வீரன் கர்ணன் போன்றோர்
செய்திட இயலாச் செயல்கள்
செய்துமே மகிழ்வி என்றான்!

Koviloor Digital Library

இருளிலே ஓய்வு கொள்ளும்
இவன் கண்கள் முன்னே வந்து
துயில்கின்ற காக்கைக் கூட்டம்
தோலுறிக்கும் கோட்டான் கண்டான்!

கோட்டானின் செயல்கள் கண்டு
கொடுமையாய் எண்ணம் கொண்டு
துயில்கின்ற பாண்டவரைத்
தொலைப்பேன் நான்என்று சென்றான்!

கிருபரை அழைத்து மேதான்
கீழ்நிலை எண்ணம் சொல்லி
குடிலிலே தூங்கும் போதே
கொல்வேன் பாண்டவரை என்றான்.

கிருபரோ தவறு என்று
பெருவாராய்ச் சொன்ன போதும்
எடுத்தெறிந்து பேசி விட்டே
ஏகினான் பாசறைக்கு!

கவசத்தைக் கழட்டி விட்டு
கண்மூடித் துயிலுகின்ற
திருஷ்டத்யும்னனைக் கொன்றுமேதான்
தீர்த்திட்டான் தந்தை பகை!

பாண்டவ சேனையையும்
பாஞ்சாலி புதல்வரையும்
ஏனையோர் பலரும் கொன்று
எரித்துமே பொசுக்கி விட்டான்!

நடந்தவை கேட்டு மன்னன்
நல்லது அசுவத் தாமா
தேனினைச் செவியில் விட்டுச்
செய்யாதோர் செய்தாய் என்றான்!

Koviloor Digital Library

ஆனாலும் அசுவத்தாமா
அநீதியாய்க் கொன்று பாலர்
அஸ்தினா புரத்தின் வாரிசு
அழித்தது தவறு என்றான்.

பாஞ்சாலி தெரிந்ததுமே
பலவாராய் புரண்டழுது
பாண்டவர் அழைத்து மேதான்
பழிதீர்ப்பீர் பார்ப்பணரை என்றாண்!

பாண்டவர் தேடிச் சென்று
பகவானின் துணை யுடனே
கங்கைநதிக் கரை ஓரத்தில்க்
கண்டிட்டார் அஸ்வத்தாமன்!

கண்ணனைக் கண்டதுமே
கடிந்துமே மந்த்ரம் சொல்லி
துரும்பினைக் கிள்ளிப்போட்டான்
தொலையட்டும் வம்சம் என்றே!

கண்ணனோ கண்டு கொண்டு
காத்திட்டான் கர்ப்பம் தன்னை
உத்திரை வயிற்றில் செல்லா
ஓர்ஒளி பாய்ச்சி அங்கே!

கண்ணனால்க் காக்கப்பட்ட
கருவேதான் வளர்ந்து பின்னே
பரீக்ஷித்து மன்னராகிப்
பாண்டவ வம்சம் காத்தார்!

Koviloor Digital Library

49. பீமன் காத்தல்

யுத்தமோ முடிந்த பின்னே
ஒருவர்பின் ஒருவராக
கண்ணனின் எண்ணம்போல
மன்னனின் ஆசி பெற்றார்!

கட்டியே பிடித்துக் கொண்டு
கண்களில் நீர் ஒழுக
என்பிள்ளை தவறினால்தான்
இறந்தார்உம் தவறேதில்லை

கண்ணனின் சொற்கள் தன்னைக்
காதகன் கேட்டிருந்தால்
எல்லோரும் சுகமாய் வாழ்வார்
இப்புவி தனிலே என்றார்!

என்பிள்ளைகள் போனால் என்ன
இவரெல்லாம் தம்பி பிள்ளை
எங்களைக் காத்துமே தான்
ஈமங்கள் செய்வார் என்றார்.

நால்வரும் சென்ற பின்னே
நடப்பதைக் கண்ணன் எண்ணி
இதோ உளான் பீமன் என்று
இரும்புத்தூண் காட்டி நின்றார்!

Koviloor Digital Library

நூறுபேர் கொன்ற தாலே
நொந்துமே போன மன்னன்
பீமன்மேல் பகைமாறாது
பிடித்திட்டான் இரும்புத்தூணை!

தூண்களோ நொறுங்கிப் போக
துயர்கொண்ட மன்னன் உடனே
தம்பியின் பிள்ளை பீமனைத்
தான்கொன்றேன் பாவி என்றார்!

கண்ணனோ பீமனைக் காத்துக்
கண்இலா ராஜன் சொல்வான்
மாமனே நொறுங்கியது
பீமனோ இல்லை என்றே!

பாண்டுவின் அண்ணன் நீவிர்
பாலர்கள் தம்பி பிள்ளை
பகைகளை மறந்து விட்டுப்
பாராண்டு காப்பீர் என்றார்!

திருதனோ மனம் வருந்தித்
தீயவன்தன் மகனை எண்ணிக்
கண்ணனே பொறுத்து நீயும்
காட்டுவாய் சுவர்க்கம் என்றார்!

Koviloor Digital Library

50. உதங்கருக்குக் கண்ணன் காட்சி

பாரதம் முடித்து விட்டுப்
பரந்தாமன் செல்லும் போது
உதங்கர் முன்னே கண்டு
உலகளந்தோன் வணங்கி நின்றார்!

பிராமணத் தபஸ்வி யான
பெரும்முனி கண்ணன் கேட்பார்
கௌரவ பாண்டவர்கள்
கண்டாயா? நலமா என்றே!

யோகத்தில் இருந்த தாலே
ஏதுமே அறியா முனிவர்
கேட்டிட்ட கேள்வி கண்டு
கிருஷ்ணனோ அதிர்ந்து போனார்!

கண்ணனோ நிதான மாகிக்
கௌரவ பாண்ட வர்கள்
களத்திலே அழிந்த செய்தி
கவலையாய்க் கூற லானார்.

முனிவரோ கோபம் கொண்டு
முன்னேநீ இருந்த போதும்
சாகவும் விட்டு விட்டாய்ச்
சண்டாளக் கண்ணா என்றார்!

Koviloor Digital Library

கபடனாய் இருந்து மேதான்
கௌரவர் கொன்றாய் நீயும்
உன்னுடை பிறப்பிற் கிதுவும்
உகந்ததோ கண்ணா என்றார்!

கண்ணனோ புன்னகைத்துக்
கதைமொத்தம் அவர்க்குச் சொல்லி
அவர்களின் செயல்கள் தானே
அழித்தது அவரை என்றார்!

தன்னுடைய உருவம் காட்டித்
தயவாகக் கண்ணன் சொல்வார்
என்னுடை அவதா ரத்தை
இதோ பார்ப்பீர் என்ற வண்ணம்

என்னாலே முடிந்த வரை
ஏதேதோ செய்து பார்த்தேன்
காதிலே கேட்க வில்லைக்
கௌரவத் தலைவன் என்றார்!

அதர்மத்தின் உருவ மாகி
அநீதிகள் செய்த தாலே
யுத்தத்தில் ஈடுபட்டு
ஒருவரும் இல்லை என்றார்!

கண்ணனைக் கண்டுமேதான்
கரங்களைக் கூப்பிக்கொண்டு
புண்ணியன் உன்னை யேதான்
புரியாது சொன்னேன் என்றார்!

கண்ணனோ முனிவருக்குக்
கருணையாய் வர மளித்து
எண்ணிய போதில் தண்ணீர்
எளிதிலே கிடைக்கச் செய்தார்!

Koviloor Digital Library

கானிலே திரிந்த யோகி
கண்களை மறைக்கும் தாகம்
ஏற்படக் கண்டுமேதான்
இறைவனை வேண்டிநின்றார்!

கண்ணனோ சொன்ன வண்ணம்
காட்டிற்குத் தேவேந் திரனோ
அம்ருதத்தைக் கொண்டு சென்றார்
அவர்முன்னே புலைய னாக!

முனிவரோ பார்த்து விட்டு
முற்றிலும் கோப மாகி
கண்ணனை நொந்து கொண்டு
காருண்யம் இதுவா என்றார்!

பிராமணன் எந்தன் உயிரோ
போனாலும் பரவா இல்லை
புலையனின் கையில் தீர்த்தம்
பொந்தேன்நான் ஓர்போதும் என்றார்!

புலையனோ மறைந்து போக
பெருமானே முன்னே வந்து
என்னநீர் பருக வில்லை
இந்திரன் அமிர்தம் என்றார்!

முனிவரோ திகைத்துப் போயே
மோசம்நான் போனேன் கண்ணா
வந்தது தேவேந்திரனா
வாய்ப்பினை இழந்தேன் என்றார்.

என்னவோ கற்றிட் டாலும்
ஏதேதோ செய்திட்டாலும்
குலமத பேதம் போகாக்
குறையவர்க்குக் காட்டி நின்றார்!

Koviloor Digital Library

51. திருக்கண்ணன் விண்ணுலகம் செல்லல்

யதுகுலத்தார் நியதிகளோ
எல்லாமே குறையிலே
ஓர்நாள் முனிவர்பலர்
ஒருசேர வந்திட்டார்!

யதுகுலத்துப் பிள்ளைகளோ
எல்லோரும் ஒன்றாகி
ஏதேதோ சொல்லியுமே
ஏளனமோ செய்துவிட்டார்!

வயிற்றிலே உலக்கை தனை
வரிந்துமே கட்டி வந்து
என்னபிள்ளை பிறக்கு மென
எகத் தாளம் செய்திட்டார்!

தபசிகளோ கண்டு கொண்டு
தாளாத கோப மதால்
உலக்கையோ பிறக்கு மதில்
உம்குலமோ அழியு மென்றார்!

சொன்னது சொன்னது போல்
சூதுநிறை ஆண்மகனோ
உலக்கையோ பெற்றிடவே
ஊரெல்லாம் பயந்திட்டார்!

Koviloor Digital Library

வயதிலே மூத்தவரோ
வந்துமே உலக்கை தனை
எரித்துப் பொசுக்கியுமே
எரிந்திடுவீர் கடலி லென்றார்!

கடலில் எறிந்த அந்தக்
கருங்காலிச் சாம்பல் களோ
கோரையாய்க் கரை முளைத்துக்
கொல்வதற்கே வளர்ந்த தங்கே!

வளர்ந்து பெருகி யவை
வனமாகக் காட்சிதர
பயந்துமே நடுங்கிவிட்டார்
பாபமந்தக் யதுகுலத்தோர்!

உலக்கையில் எரியாத
ஒருசிறு துண்டிரும்பு
கயலோ விழுங்கிவிட்டுக்
கடலினிலே வாழ இலே,

செம்படவன் வலைதனிலே
சிக்கிடவே அக்கயலோ
வாங்கியே சென்றிட்டான்
வளமான கயலென்று!

வாங்கினவன் அறுக்கயிலே
வயிற்றினுள்ள இரும்புதனை
வீசி எறிந்திட்டான்
வேடுவனின் கண்முன்னே!

வேடுவனோ இரும்புதனை
வேகமாய் எடுத்துடனே
கூர் செய்து தன் அம்பில்க்
கோர்த்திட்டான் உடனடியாய்!

Koviloor Digital Library

ஓர்நாள் திருவிழாவில்
ஒன்றுபோல் மது அருந்தி
ஏதேதோ பேசியுமே
எல்லோரும் சண்டையிட்டார்!

சண்டையோ பெரிதாகிச்
சாகும் வரை சென்றிடவே
கோரையைப் பிடுங்கியுமே
கொன்றிட்டார் பல உயிரை!

முனிகளின் சாபத்தால்
முளைத்த அந்தக் கோரைகளோ
உலக்கையாய் மாறி அங்கு
உடைத்தது பலர்தலையை!

கண்ணனோ தடுத்துமே
எண்ணென்னோ சொன்னாலும்
கேட்கவோ இலைஅவர்கள்
கெடு நேரம் வந்ததினால்!

கண்ணனும் இராமனுமே
கடுங் கோபம் கொண்டவண்ணம்
புற்களைப் பிடுங்கியுமே
போட்டுடைத்தார் பலர்தலையை!

முனிவர்களின் சாபத்தால்
முற்றிலும் குல மழிய
அச்சாபம் தனக்கு மேதான்
அடுக்குமே என நினைத்தார்!

பலராமன் தலை நின்று
பாம் பொன்று வெளியேறி
சேஷனின் அவதாரம்
சேர்ந்த தந்தக் கடலினிலே!

Koviloor Digital Library

பகவானின் பாஞ்ச ஜன்யம்
பக்குவமாய்க் கை நழுவிச்
சக்கரம், கெதை, பத்மமென
சேர்ந்ததே விண்ணுலகம்!

திருமாலின் வருகைக்காய்த்
தேவ ரெல்லாம் காத்திருந்தார்
எம்பெருமான் வந்திடுவார்
என மகிழ்ந்து விண்ணுலகில்

துவாபர யுகம் தன்னைத்
தேவனோ விட்டு விட்டுக்
கலிக்குமே வழி கொடுக்கக்
கண்ணயர்ந்தார் புல்வெளியில்!

சரஸ்வதி நதியோரம்
சாட்சாத் பரம் பொருளோ
நூறாண்டு வாழ்ந்து
பாராண்டது போதுமென்றார்!

கண்ணனாய் பிறந்துவந்து
காரியங்கள் செய்தவற்றைக்
கண்டு முடித்திடவும்
கணக்காக வேடுவனோ
மானென்று நினைத்த வண்ணம்
மாலோனின் கால்விரலில்
உலக்கையில் செய்த அந்த
ஓர் அம்பை ஏவி விட்டான்!

உலக்கையின் உருவான
ஓர்சிறு வில்லம்போ
தன்னையும் சாகடித்தால்
தர்மமே என நினைத்தார்!

Koviloor Digital Library

கண்ணனென்று தெரிந்துமே
கடிந்துவந்து வேடுவனோ
அய்யனே அறியேன் நான்
அருள்வீரே மன்னித் தென்றான்!

கண்ணனோ பார்த்துவிட்டு
கதை உன்னால் முடிகிறது
உன்னுடை தவறே தில்லை
உனக்குமே சுவர்க்கம் என்றார்!

அம்போ கால்தைத்த உடன்
அப்படியே கண்ணயர்ந்து
வந்தவினை தீர்ந்த தென்று
வானுலகம் செல்ல லானார்!

துவாபர யுகத்தி லன்று
துயர் தீர்த்த எம்பெருமான்
கலியுகம் தனில் என்று
கண் களுக்குத் தெரிவாரோ!

பக்தர்கள் உள்ள மெல்லாம்
பார்க்கத் துடிக்க யிலே
எம்பெருமான் இங்கு வந்து
எப்பொழுது பிறப்பாரோ!

துவாபர யுகம் போலத்
துயரேதும் தரமாட்டோம்
கண்ணனே சொன்னதுபோல்
கட்டாயம் பிறந்திடுவாய்!

Koviloor Digital Library

இறைவனைக் காண்பதற்கு
யாருக்குக் கொடுப் பினையோ
அன்நாள் வரும் வரைக்குமே
அவருக்காய்க் காத்திருப்போம்!
சொன்ன சொல் மாறாது
துயர் தீர்ப்பார் நிச்சயமே!

சுபம்

லூர் ஆண்டவர்
A. No. 11559
Q22
நூலகம், கோவிலூர்

Koviloor Digital Library

Koviloor Digital Library

சிவகெங்கை மாவட்டத்தில்
சிற்றழகிய ஊர்
தேவகோட்டை அருகில் உள்ள
எழுவன்கோட்டை !

இந்த விலாசத்தில்
சம்பந்தரைப் போல
நால்வரில் இளையவராய்
சண்முக ஸ்தபதிகள் !

ஓர் ஆதிசயம்!
இவரின் இருகரங்களும் பேசும்;
ஒன்று கல்லில்!
மற்றொன்று சொல்லில் !!

கல்லுக்குள் சிலை ஒளிந்திருப்பது
தெரியும் இவருக்கு
இவருக்குள் கவி ஒளிந்திருப்பது
இப்போதுதான் தெரியும் நமக்கு !
இது,
காலம் கடந்த ஞானம் இல்லை
காலம் கனிவித்த ஞானம் !

காப்பிய நாயகன் ஸ்ரீ இராமனையே
"தெய்வத் திருமகன்" என கவி வடித்து
நீதியரசர் ; தமிழறிஞர் ; சொல்லழகர்
திரு. சொக்கலிங்கம் அவர்கள் கரங்களால்
இலக்கிய உலகுக்கு ஈந்தார் !

இவரின் இன்னொரு முயற்சியே
"கண்கண்ட தெய்வம்" (ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்)
நடை பயிலும் குழந்தையும்
கண்ணன் கதை பயில
வண்ணமாய் மலரும் மலர்!

குமரன் புதிப்பகம்

கவிஞர் நா. சபாரெத்தினம்
பாண்டியன் கிராம வங்கி, காரைக்குடி